பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 22 வெள்ளிக்கிழமை 07.07.2023 கதிர் 238

# 7 X 2 மீற்றர் நீள அகல புதைகுழிக்குள் கொக்குத்தொடுவாயில் மனித எச்சங்கள்

## அடையாளம் இடப்பட்டது நேற்று 13 பேருடைய எச்சங்களும் மீட்பு



ந.லோகதயாளன்.

முல்லைத்தீவு மாவட்டம், கொக்குத் தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியைத் தோண்டுவதற்கான பூர் வாங்க ஏற்பாடுகள் நேற்று முல்லைத்தீவு நீதிவான் முன்பாக மேற்கொள்ளப்பட்டன. 7 மீற்றர் நீளம் மற்றும் 2 மீற்றர் அகலம் கொண்ட பெரும் சதுரக் குழிக்குள் மனித எச்சங்கள் இருக்கின்றன என்று அடையாளப்படுத்தப்பட்டது. இந்தப் பணி களின்போது மட்டும் 13 மனித ☞2

## இது ரகசியம் அல்ல!

சீனித் தொழிற்சாலை விவகாரம் தொடங்கியைத் தொடர்ந்து நாளாந்தம் வாசகர்களிடம் இருந்து ஏதாவது காரசார மான கருத்துக்கள் வந்துகொண்டே இருக் கின்றன. அவற்றில் பலவற்றை அவர்கள் வெளியிடவேண்டாம் என்று குறிப்பிட்டே அனுப்புவதால் வாசகர்களுடன் அவற்றைப் பகிர்ந்துகொள்வதில்லை. சில நாள்களின் முன்னர் வந்திருந்த ஒரு வாசகரின் கருத்தை நேற்று இந்தப் பத்தியில் உங்களுடன் பகிர்ந்துகொண்டிருந்தேன். அதன் பின்னர் மற்றொரு கடிதம் வந்திருக்கிறது. அதனைப் பிரசுரியுங்கள் என்று கேட்டே அது வந்திருப்பதால் அதனை அப்படியே இங்கு உங்களுக்காகத் தருகின்றேன்.

தங்களது 4ஆம்,5ஆம் திகதி இடிமின்னல் பத்தியில் வன்னியில் அமையவுள்ள சீனித் தொழிற்சாலை தொடர்பில் , டெலோவின் சுரேன் மற்றும் செல்வம் ஆகியோரின் மாய்மாலங்களை கிழித்து தொங்கப்போட்டி ருந்தீர்கள். இதன் விளைவாக குற்றமுள்ள நெஞ்சுகள் குறுகுறுத்து, நஞ்சை கொட்டி இன்னும் தங்களை தாங்களே நாறடித்து கொண்டுள்ளன. ☞2

## லாஃப்ஸ் எரிவாயு விலையும் குறைப்பு

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டரின் விலை குறைக்கப்பட்டுள்ளது என்று லாஃப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில், 12.5 கிலோகிராம் லாஃப்ஸ் சிலிண்டரின் விலை 300 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 3 ஆயிரத்து 690 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

5 கிலோகிராம் லாஃப்ஸ் சிலிண்டர் 120 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 1,476 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோகாஸ்விலைஏற்கனவேகுறைக்கப்பட்ட நிலையில் தற்போது லாப் காஸ் விலையும் குறைக்கப்பட்டுள்ளது. (02)

## அடிப்படைவாத அரசியல் கட்சிக் குழு வடக்கில் தேவையற்றதை செய்கிறது

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

அடிப்படைவாத அரசியல் கட்சியின் குழுவொன்று வடக்கில் மத விழிபாட்டிடங்களைக் குறிவைத்து தேவையற்ற விடயங்களை செய்து வருகின்றது.என்று குற்றஞ்சாட்டினார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். ஆனால் அந்தக் கட்சி எது என்று அவர் பெயர் குறிப்பிடவில்லை. அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு தொடர்பில் இந்தியாவும் இலங்கையும் கவனம் செலுத்தி வருகின்றன. நமது பிராந்தியத்தின் கடல் சார் பாதுகாப்பில் கடற்படை பொறுப்புடன் பெரும் பங்களிப்பை ஆற்றிவருகின்றது.

ஒவ்வொரு ஆண்டும், எதிர்வரும் ஐந்து ஆண்டுகள் தொடர்பில் நாட்டின் பாதுகாப்பு குறித்த மதிப்பீட்டு அறிக்கையொன்றைப் தயாரிக்கப் படுறது. இதன்போது பயங்கரவாதம், தீவிரவாதம், சட்டவிரோத நடவடிக்கைகள், புவிசார் அரசியல் குற்றங்கள் ஆகியவை தொடர்பில் இந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்படுகின்றன.

இந்த மதிப்பீட்டின்படியே, ஒரு நாடாக நாட்டின் பாதுகாப்பு குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தீர்மானங்கள் எடுக்கும்போது இந்த மதிப்பீடுகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

முக்கியமாக, சட்டத்தின் ஆட்சி நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை ☞2

## வவுனியாவில் கரும்பு செய்ய அனுமதித்தால் மொத்த வன்னி நிலமுமே பாலைவனமாகும்

### முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் எச்சரிக்கை

வவுனியாவில் கரும்பு செய்கை வந்தால் வன்னி பாலைவனமாகும் என வடமாகாணசபையின் முன்னாள் விவவசாய அமைச்சர் க.சிவநேசன் எச்சரித்துள்ளார்.

வட மாகாண சபையின் முன்னாள் விவவசாய அமைச்சர் க.சிவனேசன், முல்லைத்தீவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியாவில் கரும்பு செய்கைக்கு 72ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்கப்படவுள்ளது.

ஒரு ஏக்கர் கரும்பு செய்கையால் வரும் வருமானத்தினைவிட ஏனைய பயிர்களை செய்தால் 5 மடங்கு வருமானம் பெறப்படும், அத்துடன் கரும்பு செய்கைக்கு அதிகளவான நீர் தேவை.

இது ஏற்கனவே வட மாகாணசபையினால் ஆய்வு செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்ட திட்டம்.

12 தொடக்கம் 14 மாதங்கள் கரும்பு செய்கைக்கான அறுவடை காலம் இவ்வாறான ☞2

## இலங்கை – தமிழக மலையகத் தமிழர்கள் தோழமை இயக்கம் மனோ தலைமையில்



தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் எம்.பியைத் தலைவராகக் கொண்டு தமிழ்நாட்டில் இலங்கை - தமிழக மலையகத் தமிழர் தோழமை இயக்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு - திருச்சியில் நேற்று முன்தினம் (05) நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கை - தமிழக மலையகத்தமிழர் தோழமை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினர்களாக,

* தலைவர் (இலங்கை) - மனோ கணேசன் (எம்.பி.)
* தலைவர் (தமிழ்நாடு) - எம். எஸ் செல்வராஜ்
* துணைத் தலைவர்கள் - பி.டி. ஜோன், கே. ஏ. சுப்பிரமணியம், மிசா மாரிமுத்து
* செயலாளர் - சட்டத்தரணி தமிழகன்
* துணைச் செயலாளர்கள் - சட்டத்தரணி ஈசன், டார்வின் தாசன்
* செயற்குழு உறுப்பினர்கள் - திருமதி செல்வராணி, திருமதி கலா
* ஆலோசகர் குழு உறுப்பினர்கள் - முனைவர் ஸ்டீபன் ஆன்டணி, பிஜோய், சிவஞானம், டி. எஸ். எஸ். மணி, அஜித் மேனன் - ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(02)

## நுவரெலியா மாவட்டத்தில் தொடரும் சீரற்ற காலநிலையால் பலர் பாதிப்பு!

### அனைத்துத் தரப்பு இணக்கத்தோடு நடவடிக்கை



நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் இன்று காலை வரை 59 குடும்பங்களைச்சேர்ந்த 245 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம், மண்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களால் 42 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

அத்துடன், 28 ☞2

## 13ஐ அரசியல் தீர்வாகத் திணிக்கும் முயற்சிக்கு துணைபோகக்கூடாது

### தமிழ்க் கட்சிகளிடம் அ.யோதிலிங்கம் கோரிக்கை

பதின்மூன்றாவது திருத்தத்தை திணிக்கின்ற முயற்சிகளுக்கு தமிழ் கட்சிகள் ஒரு போதும் துணை போகக் கூடாது. இது எந்தவகையிலும் தமிழ் மக்களுக்கு தீர்வாக அமையாது. ஆகவே இது தொடர்பாக தமிழ் கட்சிகள் தெளிவான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்று சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநரும் அரசியல் ஆய்வாளர் சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இன்று அவர் தனது அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

13வது திருத்தம் தற்போது மீண்டும் பேசு பொருளாகி வந்திருக்கிறது. இந்தியா எவ்வாறாயினும் பதினொன்றாவது திருத்தத்தினை அரசியல் தீர்வாக திணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிகிறது.

தமிழ் நாட்டினுடைய பாரதிய ஜனதா கட்சியினுடைய மாநில தலைவர் அண்ணாமலை புலம்பெயர் நாடுகளுக்குச் சென்று குறிப்பாக லண்டனுக்கு சென்று புலம்பெயர் தரப்புகளோடு 13 வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பேசியிருக்கிறார்.

சர்வதேசநாணயநிதியம் இன்றுளப்பாடுபட்டாவது இனப் பிரச்சினையை தீருங்கள் என்று ஒரு நிபந்தனையை வைத்ததாக கூறப்படுகிறது. அதேபோலபடையினர் உடைய எண்ணிக்கையை ஒரு இலட்சமாக குறைக்குமாறு நிபந்தனை வைத்ததாகவும் சொல்லப்படுகிறது

ஆகவே இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரையில் ஏதோ ஒரு வகையில் இந்த பிரச்சனையை தீர்க்க வேண்டிய ஒரு கட்டாயம் வந்திருக்கிறது. இந்தியாவிற்கும் இனப் பிரச்சனை தீர்வு தொடர்பில் 13 க்கு அப்பால் செல்வதற்கான ☞2

## ஊழல் எதிர்ப்புச் சட்டம் நேற்று நாடாளுமன்றில் நிறைவேற்றம்

ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது, திருத்தங்கள் ஜூலை 19 நாடாளுமன்ற அமர்வில் குழுநிலைவேளையின்போது மேற்கொள்ளப்படும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் மீதான விவாதத்தின் இறுதி பகுதியில் விசேட உரையாற்றுகையில் சபாநாயகர் இதனைக் குறிப்பிட்டார்.

உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள முதலாவது திருத்த ☞2

# 13ஐ முழுமையாக அமுல்படுத்தும்படி முதலில் சர்வதேசம் இலங்கையிடம் வலியுறுத்தட்டும்

## கனேடிய இராஜதந்திரியிடம் மனோ, செல்வம், சித்தர் கூட்டாகக் கோரிக்கை



‘ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறையவே பேசுகின்றார். குறைவாகவே செய்கின்றார். அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தத்தை முதலில் முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி - தமது நேர்மையைப் பறைசாற்றும்படி - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கனடா, அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், ஆஸ்திரேலியா, ஜப்பான் உள்ளடங்கிய சர்வதேச சமூகம் ஒரே குரலில் வலியுறுத்தவேண்டும். இதற்குக் கனடா முன்முயற்சி எடுக்க வேண்டும். நாட்டைவிட்டு வெளியேறிய தமிழர் பெருந்தொகையினருக்கு அடைக்கலம் கொடுத்துள்ள நாடு என்ற வகையில் கனடாவுக்கு இதற்கு உரிமை உள்ளது.‘

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணித் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர், கனேடிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகார பணிப்பாளர் நாயகம் மரியா லூயிஸ் ஹனானிடம் நேரில் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

‘13 ஆவது திருத்தம் தேசிய இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வு அல்ல. இது எமக்குத் தெரியும். ஆனால், புதிய சட்டங்களை உருவாக்க முன், ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

உண்மையை எழுதினால் காலைக்கதிர் மஞ்சள் பத்திரிகை என்றால் இவர்கள் எப்போதாவது கொடுக்கும் விளம்பரங்களுக்கு ஆசைப்பட்டு மௌனம் காக்கும் மற்றைய சில பத்திரிகைகளை என்னவென்று அழைப்பது?

வன்னியின் நீராதாரம் சிதைவதோ அன்றேல் திட்டமிட்டகுடியேற்றம்நிகழப் போவதோ இவர்களின் கவலை அல்ல. கிடைக்க வேண்டிய ''தொகைக்கு'' ஆப்பு விழுந்துவிட்டதுதான் இவர்களின் கோபத்திற்குக் காரணம். ஒன்று மட்டும் தெளிவாகிறது இந்த சுரேன் உள்வந்த பின்னரே டெலோ , தமிழரசுக் கட்சி முரண்பாடு அதிகமாகியது.

சுமந்திரனின் சட்டத் திறமையும், பொது அறிவும், நாடாளுமன்றத்தில் ஆற்றும் துல்லியமான உரைகளும், எல்லாவற்றுக்கும் மேலாக அவருக்கு அளிக்கப்படும் ராஜதந்திர அங்கீகாரங்களும் (diplomatic recognition) தான் இவர்களுக்கு சுமந்திரன் மீது எரிச்சலையும் கோபத்தையும் கிளப்பியது. சிலவேளைகளில் சுமந்திரன் மற்றவர்கள் உடன்கலந்தாலோசிக்காமல் முடிவுகள் எடுத்திருக்கலாம். இதற்கு நாடாளுமன்றம் சொல்லாமலே நாற்காலியை இறுகப்பற்றிக்கொண்டிருக்கும் சம்பந்தரும், கட்சி மகாநாடு நடத்தாமல் 5 வருடங்களாகத் தலைவர் பதவியில் ஒட்டிக்கொண்டு இருக்கும் மாவையும்தான் காரணம்.

தமிழ் அரசுக் கட்சியினை ஒழுங்காக மீளக்கட்டமைத்து படித்த துடிப்பான இளைஞர்களை உள்வாங்கி ஒவ்வொரு துறையையும் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு அளித்திருந்தால் தற்போதிருக்கும் குளறுபடிகளைத் தவிர்த்து இருக்கலாம்.

மேலும் சுமந்திரன் போல் அறிவுபூர்வமாக கலந்துரையாட டெலோவில் யாரேனும் தற்போதுவரை இல்லை என்பதே எனது கருத்து. தனிப்பட்ட கையாலாகாத காரணங்களை வைத்து ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பதாக நினைத்து சுரேனும், செல்வமும் காலைக்கதிரையும் சுமந்திரனையும் தாக்குகிறார்கள் . மொட்டை தலைக்கும் முழங்காலிற்கும் முடிச்சு போடப்போனது, சொந்த காசில் சூனியம் வைத்த கதை ஆகிவிட்டது.

இவர்கள் வடக்கு கிழக்கில் வேலை வாய்ப்புகளை உருவாக்க நினைத்தால் சுரேஷ்பிரேமச்சந்திரன் சமீபத்தில் தெரிவித்த பனை அபிவிருத்தி சபையின் கேவலங்களை அரசுடன் பேசி சீர் செய்ய முயற்சிசெய்யலாமே.

தீவுப் பகுதியின் முடிசூடா மன்னரும் ஊழல்வாதி அமைச்சரும் சூறையாடிய திக்கம் வடிசாலையை மீண்டும் தொடங்கி உலகத்தரம் வாய்ந்த மது உற்பத்தியை ஊக்குவித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வழிவகுக்கலாமே. மேலும் பனஞ்சீனி தொழில்நுட்பத்தை தமிழ்நாட்டில் பெற்று வடக்குகிழக்கில் இருதொழிற்சாலைகளை தொடங்க ஏன் முயற்சி செய்யக்கூடாது?

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பனஞ்சீனி மிகத் தரம்வாய்ந்தது. சுற்றுச்சூழல், நீராதார பாதிப்பும் ஏற்படாதது. பனை அபிவிருத்தியும் பனை வளங்களும் மேலும் பெருகும். நம் மக்களின் வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கும். ஆகவே அற்ப கமிஷனுக்கு இனத்தையும் நிலத்தையும் அடைவு வைக்காமல் செல்வம், சுரேன் போன்றவர்கள் இனியாவது இதய சுத்தியுடன் செயற்படவேண்டும்.

விஜேன்.

பி.கு: ஆசிரியர் அவர்களே! தயவுசெய்து இதனை பிரசுரம் செய்து இவர்களின் இரட்டை நிலைப்பாட்டை மேலும் அம்பலப்படுத்துங்கள். துணிவுடன்

உண்மையை வெளிப்படுத்தும் உங்கள் பணி தொடர வாழ்த்துக்கள்.

இதுதான் அந்த வாசகர் எழுதியுள்ள விடயங்கள். வாசகர்கள் எவ்வளவு நுணுக்கமாக விடயதானங்களை ஆராய்ந்து அவதானிக்கிறார்கள் என்பதற்கு இதுவொரு உதாரணம் மட்டுமே. தலைவர்கள் சொன்னால் அதனைக் கேட்டுவிட்டு அப்படியே போகும் கூட்டமல்ல இன்றைய மக்களும் இளைஞர்களும் என்பதை அரசியல்வாதிகள் மனங்கொள்ள வேண்டிய காலம் இது.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## 7 X 2 மீற்றர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எச்சங்கள் மீட்கப்பட்டன. ஜூலை 13 மீண்டும் புதைகுழியைத் தோண்டுவது தொடர்பாக ஆராய்வதற்கு நாள் குறிக்கப்பட்டது. அன்றைய தினம் துறைசார் நிபுணர்கள் அனை வரையும் வருகைதருமாறு நீதிமன்று அழைப்பாணை வழங்கியதுள்ளது.

கொக்குத்தொடுவாயில் குடிதண்ணீர்க் குழாய் பொருத்தும் பணிக்காக ஜூன் 29 அகழப்பட்ட குழியில் மனித எச்சங்களும் ஆடைகளும் காணப்பட்டன. இது உடனடியாக கொக்குளாய் பொலிஸார் ஊடாக முல்லைத்தீவு நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்ட நீதிவான், புதைகுழியைத் தோண்டுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கவனிக்க ஜூலை 6 நாள் குறித்திருந்தார்.

இதற்கமைய நேற்றுக் காலை நீதிவான், சட்ட வைத்திய அதிகாரி, தடயவியல் நிபுணர், சட்டத்தரணிகள், பொலிசார் மற்றும் மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள் முன்னிலையில் மனித எச்சங்கள் இனம் காணப்பட்ட பகுதியில் புதைகுழி அகழ்வுக்கான ஆரம்பக்கட்டப் பணிகள் இடம்பெற்றன. புதைகுழியின் நீள அகலத்தை அறியும் வகையில் பெக்கோ கனரக இயந்திரம் மூலம் மேலடுக்கு மண் அகழப்பட்டது.

2 மீற்றர் அகலமும் 7 மீற்றர் நீளமும் கொண்ட பகுதிக்குள் மனித எச்சங்கள் இருப்பதாக நேற்றைய தினம் அடையாளமிடப்பட்டுள்ளது. நேற்று அகழப்பட்ட மேலடுக்கு மண்ணிற்குள் இருந்து 13 சடலங்களின் எச்சங்கள் மீட்கப்பட்டன. அவை விடுதலைப் புலிகள் இயக்கப் பெண் போராளிகளினுடையவையாக இருக்கலாம் என்று அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

புதைகுழிப் பகுதியில் பணிகள் நேற்று மாலை இடைநிறுத்தப்பட்டன. ஜூலை 13 இது தொடர.பான சகல திணைக்களங்களுடன் பேசி அதன்பின்னரே அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பது என்று நீதிமன்றம் முடிவ செய்தது.

அடையாளமிடப்பட்டுள்ள மனிதப் புதைகுழிக்குள் மேலும் பல மனித எச்சங்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் உண்டு என்பதால் அது தொடர்பில் துறைசார் நிபுணர்களுடன் ஆராய்ந்து அவற்றை முறைப்படி அகற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

இதேநேரம் குறித்த அகழவுப் பணி இடம்பெறும் இடத்திற்கு சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் உள்ளிட்ட பலரும் நேரில் வருகை தந்து பணஅகழ்வுப் பணிகளைப் பார்வையிட் டனர்.

இந்த அகழ்வுப் பணியின்போது மீட்கப்பட்ட சான்றுப்பொருட்கள் அனைத்தும் தடயவியல் நிபணர்களால் பாதுகாப்பாக எடுத்துச்செல்லப் பட்டது.

## 13ஐ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பு சட்டத்தில் இன்று இருக்கும் 13 ஆவது திருத்த அதிகாரப் பகிர்வு சட்டதையும், 16 ஆவது திருத்த மொழியுரிமை சட்டதையும் அமுல் செய்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காட்டட்டும். அதை சர்வதேசசமூகம் வலியுறுத்த வேண்டும். இன்று நாம் இலங்கை அரசுடன் பேசி சலித்துப் போய் விட்டோம். அதேபோல் சர்வதேசசமூகத்திடமும் மீண்டும் இவற்றையே பேசி சலித்துப் போய் கொண்டிருக்கின்றோம்' - என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலுள்ள கனேடியத் தூதுவரின் இல்லத்தில் நேற்று (06) நடைபெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வெல்ஷ், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதி சின்னையா இரத்தின வடிவேல், கனேடியத் தூதரக அரசியல் அதிகாரி கோபிநாத் பொன்னுத்துரை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இது தொடர்பில் மனோ கணேசன் தனது கீச்சகப் பக்கத்தில், பன்மைத் தன்மையை கொண்டாடுவது, அதிகாரப் பகிர்வு, 13 ஆவது திருத்தம், மொழியுரிமை மற்றும் சமத்துவம், ஆகியவை பற்றி கனேடியத் தரப்புடன் பயன்தரும் விதத்தில் பேசப்பட்டன - என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிப் பிரதிநிதிகள், கனேடிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரப் பணிப்பாளர் நாயகத்திடமும், இலங்கைக்கான கனேடியத் தூதுவரிடமும், இந்த நாட்டை சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமான நாடு எனத் தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும், இத்தகைய கொள்கையை முன்னெடுக்கும் எந்தவொரு கொழும்பு அரசையும் தாம் எதிர்த்துப் போராடுவோம் எனவும் கூறினர்.

தமது அபிலாஷைகள் தொடர்பில் ஆட்சியாளர்களிடம் பேச்சு நடத்துவதைப் போன்று, சர்வதேச சமூகத்திடம் எடுத்துக் கூறுவதிலும் சலிப்படைந்து வருகின்றார்கள் என்று தமிழ்த் தலைவர்கள் இன்று கூறியதைத் தாம் புரிந்து கொள்வதாகவும், அது தமக்கு ஒருசெய்தி என்றும் கனேடியத் தரப்பினர் தம்மைச் சந்தித்த கட்சித் தலைவர்களிடம் தெரிவித்தனர். (02)

## நுவரெலியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பங்களைச் சேர்ந்த 121 பேர் 2 பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் இன்றும் மழை பெய்து வருகின்றது. மாவட்டத்துக்கான மண்சரிவு அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (02)

## 13ஐ அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பங்கள் எவையும் இல்லை. இந்த நிலையில் தமிழ் தரப்பை எப்படியாவது 13வது திருத்தச் சட்டத்தை எப்படியாவது ஏற்க வைக்க வேண்டும் என்கின்ற ஒரு வகையான அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

13வது திருத்தம் ஏற்கனவே யாப்பில் உள்ள ஒரு விடயம். அதனை நடைமுறைப்படுத்தப்படுவது அரசினுடைய கடமை. இதைவிட பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பான பொறுப்பு தமிழ் மக்களுக்கு இல்லை. ஏனெனில் 13வது திருத்தம் இலங்கை இந்தியா ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டது.

அது இரண்டு அரசுகளில் தங்களுக்குள் பேசி கொண்டுவரப்பட்ட ஒரு திட்டம். தமிழ் மக்களுக்கு அது தொடர்பான எந்த விதமான பொறுப்பும் இல்லை. அதேவேளையில் அதனை அரசியல் தீர்வாக திணிக்கின்ற ஒரு முயற்சி இடம்பெறுகிறது. இந்த முயற்சியை தமிழ் மக்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. 13வது திருத்தம் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை தீர்த்துக் கொள்வதற்கு எந்த வகையிலும் போதுமானதாக இல்லை. அது ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட ஒரு அரசியல் தீர்வு.

ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட ஒரு திருத்தம் தான் 13 வது திருத்தம். ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட எந்த அதிகார பகிர்வும், நடைமுறையில் தமிழ் மக்களுக்கு எந்தவித பயனையும் தரப்போவதில்லை.

இதைவிட பல நெருக்கடிகள் 13 வது திருத்தத்தில் இருக்கின்றன.

ஒன்று ஆளுநருடைய அதிகாரம். நிர்வாக துறையை அதிகாரம் முழுமையாக ஆளுநரிடமே இருக்கிறது. முதலமைச்சரும் அமைச்சரும் வெறுமனே அவர்கள் ஒரு ஆலோசனை கூறுபவர்களாக மட்டும் தான் இருக்கிறார்கள்.

மாகாண சபை சட்டம் இயற்றுவதில் பல்வேறு தடைகள் இருக்கிறது நாடாளுமன்றம் ஒரு தடை, ஆளுநர் ஒரு தடை, ஜனாதிபதி ஒரு தடை, சட்டமா அதிபர் ஒரு தடை, உயர் நீதிமன்றம் ஒரு தடை, ஒரு தடை என்று சொல்லி பல தடைகள் இருக்கின்றன.

இதைவிட தமிழ் மக்களினுடைய கூட்டிருப்பை, கூட்டுரிமையை, கூட்டு அடையாளத்தை, பேணக் கூடிய வகையிலே வடக்கு கிழக்கு இணைக்கப் படவில்லை. அது இப்போது பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே இவ்வாறான ஒன்றை தமிழ் மக்கள் ஒருபோதும் அரசியல் தீர்வாக ஏற்றுக் கொள்ள முடியாது. இது தொடர்பாக ஆதரிக்கின்ற தமிழ்கட்சிகள் இது தொடர்பாக முழுமையாக புரிந்துகொள்ள வேண்டும்.

அதாவது பதிமூன்றாவது திருத்தை நடைமுறைபடுத்துவது என்பது வேறு. அதனை அரசியல் தீர்வாக திணிப்பது என்பது வேறு. இங்கே நடைமுறைப்படுத்துவது என்று சொல்லிக் கொண்டு அரசியல் தீர்வாக திணிக்கின்ற முயற்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது-என்றார்

## வவுனியாவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்திற்குள் ஏனைய பயிர்களைச் செய்து அதிக இலாபத்தினை ஈட்டலாம்.

வடமாகாணத்தில் கரும்பு செய்கையில் ஈடுபட்ட அனுபவம் யாருக்கும் கிடையாது. இலங்கை ஆட்சியாளர்களால் கரும்பு செய்கை மேற்கொள்ளப்பட்டு சீனி உற்பத்தி செய்யப்பட்ட கந்தளாய் சீனி தொழில்சாலைக்கு சொந்தமான பல ஏக்கர் நிலங்கள் இன்று தரிசாக கிடக்கின்றன.

அதுபோன்றே அதிக நீர் தேவைப்படும் கரும்பை வவுனியா வடக்கில் பயிர் செய்ய அனுமதித்தால் வன்னி நிலமே பாலைவனமாகும். இவ்வளவு இந்த மக்களின் வாழ்வாதாரத்தினை சீரழித்து இந்த கரும்பு செய்கையினை செய்கை பண்ண வேண்டுமா?

மேலோட்டமாக பார்க்கும்போது இப்போது இருக்கின்ற ஜனாதிபதி நல்லவர், இராணுவம் வைத்திருக்கும் காணிகளை விடுவிக்கின்றார் என்றுதான் தெரியும். ஆனால் கரும்பு செய்கை என்று குடியேற்றுவதற்காக வவுனியா வடக்கில் இவ்வளவு பெருந்தொகையான வனவளத்தினை அழிப்பதற்கும் அவர் தயாராக இருக்கின்றார் என்கின்றபோது இதன் உள்நோக்கம் என்ன என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும் - என்றார்.

## ஊழல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோசனையில் சட்ட வரைபின் 28 பக்கங்கள் திருத்தம் செய்யப்படவேண்டும் அதேபோல் இரண்டாவது திருத்த யோசனையிலும் பல விடயங்கள் திருத்தம் செய்யப்படவேண்டும்.

ஆகவே ஜூலை 19 புதன்கிழமை இடம்பெறவுள்ள நாடாளுமன்ற அமர்வின் போது துறைசார் மேற்பார்வைக் குழுவின் யோசனைகளுடன் குழுநிலைவேளை திருத்தத்துடன் சட்டமூலத்தை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சபை முதல்வரின் உரைக்கு எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷமன் கிரியெல்ல, உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் விவாதித்து தற்போது வேண்டாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. சட்டமூலத்தை நிறைவேற்றாமல் தொடர்ந்து இழுபறி நிலைக்கு இந்த ஆட்சி செல்கிறது.

ஆகவே வியாழக்கிழமை உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்றி அதன் பின்னர் திருத்தம் செய்யலாம் என வலியுறுத்தினார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கபுடாவின் யோசனைக்கு அமைய நேற்று முன்தினம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை முன்வைக்கப்பட்டது. தற்போது ஊழல் எதிர்ப்பு சட்டமூலமும் கபுடாவின் யோசனைக்கு அமைய பிற்போடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாட்டை ஒட்டுமொத்த மக்களும் அவதானித்துக் கொண்டுள்ளார்கள் என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் நீதியமைச்சர் அமைதியாக உள்ளார். ஆகவே திருத்தம் தொடர்பில் அவர் குறிப்பிட வேண்டும்- என்றார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன.. சபை முதல்வர் முன்வைத்த யோசனைக்கு சபை இணக்கமா என வினவினார். ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் இணக்கம் என்றார்கள்.

இதன்போது எழுந்து உரையாற்றிய நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்துக்காக கடந்த 10 மாத காலமாக பாடுபட்டுள்ளேன். பல விடயங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. ஆகவே தொடர்ந்து சட்டமூலத்தை நிறைவேற்றாமல் இருப்பதற்கான காரணத்தை நான் அறியவில்லை என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நீதியமைச்சரின் கருத்து பல விடயங்களை வெளிப்படுத்தியுள்ளது. கபுடாவின் யோசனைகளா ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்துக்கு தடையாக உள்ளது என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை நிறைவேற்றப்பட்டு அதன் திருத்தங்களை ஜூலை 19 குழுநிலையில் மேற்கொள்வோம் என்றார். இதற்கு எதிர்க்கட்சிகளும் இணக்கம் தெரிவித்ததை தொடர்ந்து உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

# யாழ். பல்கலைக்கு தெரிவாகும் துணைவேந்தர் எமது பாரம்பரியங்களைப் பாதுகாக்கவேண்டும்!

## அங்கஜன் வலியுறுத்து



யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருக்கான தெரிவு இடம்பெற உள்ள நிலையில் துணை வேந்தராக வருபவர் பல்கலைக்கழக மற்றும் தமிழ் பாரம்பரியங்களை பாதுகாப் பவராக செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கோரியுள்ளார்.

இது தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் -

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு தனிச் சிறப்புள்ளது. அதாவது பரமேஸ்வராக் கல்லூரியை தானமாக வழங்கி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்கள்.

ஒரு கல்விக் கூடத்துக்காக ஒரு கல்விக் கூடத்தை தானம் கொடுத்து உருவாக்கப்பட்ட யாழ்பல்கலைக்கழத்தின் துணைவேந்தர்களாக இருந்த பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் வித்தியானந்தன் மற்றும் பேராசிரியர் துரைராஜா போன்றவர்கள் எமது சமூகத்திற்கு அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கான துணைவேந்தர் தெரிவு இடம்பெற உள்ள நிலையில் துணைவேந்தராக தேர்வு செய்யப்படுபவர் எமது வரலாறுகளை தாங்கிச் செல்பவர்களாக இருக்க வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பிரிவுக்காக நால்வர் போட்டியிடுகின்ற நிலையில் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படும் மூவரின் பெயர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்படும்.

ஜனாதிபதி தான் விரும்புகின்ற ஒருவரை துணைவேந்தராக தெரிவு செய்யும் பொறுப்பு உள்ள நிலையில் தெரிவு அரசியல் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான தெரிவாக அமையக் கூடாது.

ஆகவே நான் இந்தக் கருத்தை அரசியல்வாதி என்ற நிலையில் பதிவு செய்யாமல் நானும் ஒரு குடிமகன் என்ற நீதியில் எமது மரபுகள் சம்பிரதாயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நீதியில் பதிவு செய்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (05)

## அடிப்படைவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேணுவதில் தாக்கம் செலுத்துகிறது. எனவே, சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டாத எந்தநாட்டிலும் முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

இந்நாட்களில் நிலவும் மோசமான வானிலையால் 11 மாவட்டங்களில் உள்ள 594 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 2247 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது அனர்த்தமுகாமைத்துவப் பிரிவுடன் இணைந்து அவர்களுக்கான நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அனர்த்த நிவாரணங்களை வழங்குவதில் தற்போதுள்ள சுற்றறிக்கைகளை தவறாக பயன்படுத்துவதை தடுக்க தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, அவற்றை விரைவில் திருத்த வேண்டும். 2016 மற்றும் 2021 க்கு இடையில், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் 60 பில்லியன் செலவிட்டுள்ளது.

மேலும், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் 33,000 உறுப்பினர்கள் பணியாற்றுகின்றனர். அதில் யானை வேலிகளைப் பாதுகாக்க ஏராளமானோர் குவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், காட்டு யானைகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக யானைவேலிகளை அமைக்க 10 பில்லியன் ரூபா செலவிடப் பட்டுள்ளது. ஆறாயிரம் யானைகளிடம் இருந்து மக்களை பாதுகாக்க சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பத்தாயிரம் பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தென்பகுதியைப்போன்று வடக்கு, கிழக்கிலும் தேசிய மாணவர் படையணிக்கு 20% உறுப்பினர்களை இணைப்பது மற்றும் சமூக பாதுகாப்புக்காக அவர்களை ஈடுபடுத்துவது குறித்தும் கவனம்செலுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து ஒவ்வொரு பகுதியிலும் சமூக புலனாய்வு பிரிவாக அவர்களை பணியமர்த்துவதற்கான பிரிவுகளை நிறுவுவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் கோரிக்கைகளை முன்வைத்து பல்வேறு நிறுவனங்கள் மற்றும் சேவைகள் சார்பாக பாதுகாப்புப் படை உறுப்பினர்களை பல்வேறு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தினார்கள். ஆனால் எதிர்காலத்தில் அத்தியாவசிய பணிகளுக்கு மாத்திரம் பாதுகாப்புப் படையினரை பணியமர்த்த நடவடிக்கை எடுப்பதன் மூலம் பாதுகாப்புப் படையினரின் கௌரவத்தைப் பாதுகாக்க முடியும். அதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அடிப்படைவாத அரசியல் கட்சியின் குழுவொன்று வடக்கில் மதஸ்தலங்களை குறிவைத்து தேவையற்ற விடயங்களை செய்து வருகின்றது. ஆனால் அவை ஒரு நாட்டில் இடம்பெறக்கூடாத விடயங்கள். வடக்கு கிழக்கில் காணிகளை வழங்கும் போது யாரையும் மகிழ்விக்கும் நோக்கில் காணி வழங்கப்படுவதில்லை. அவை அவற்றின் உண்மையான உரிமையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட அரசாங்கம் ஒரு குழுவையும் நியமித்துள்ளது. இதுவரை வடக்கில் 80% வீதமான காணிகள் மீண்டும் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. யாரையும் மகிழ்விப்பதற்காக இராணுவ முகாம்கள் அகற்றப்படுவதில்லை. ஆனால் ஒரு அரசாங்கம் என்ற வகையில் முறையான விசாரணைக்குப் பின்னரே இறுதி முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

பல்வேறு குழுக்கள் அன்றும் இன்றும் நாட்டைச் சீர்குலைக்க முயற்சிக்கின்றன. இதுபோன்ற சூழ்நிலைகளைத் தடுக்க பாதுகாப்புப் படைகள் செயல்பட்டு வருகின்றன. எம்.பி.க்களின் கடிதங்களுக்கு வேலை வழங்கிய காலமும், ஆர்ப்பாட்டங்களுக்கு பயந்து வேலை வழங்கிய காலமும் மாற்றப்பட வேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்காக மிகவும் கடினமான மற்றும் பிரபல்யமற்ற முடிவுகளை எடுக்க வேண்டும்.- என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம் 076 443 80 22



## தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்து மனிதப் படுகொலையில் ஆட்சியாளர்கள்

### வைத்தியர் காவிந்த ஜயவர்தன விசனம்

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்து மனித படுகொலைச் செயற்பாட்டில் இந்த ஆட்சி ஈடுபடுகிறது. நாட்டில் சுகாதாரத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. சுகாதாரத்துறை அமைச்சரின் கருத்துக்கள் பொறுப்பற்றனவாக உள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 'நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்' தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாட்டில் சுகாதாரத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் வைத்தியர்கள், தாதியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். வைத்தியசாலைகளில் மருந்து உட்பட மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப்பாடு நாளாந்தம் தீவிரமடைந்து செல்கிறது.

அரச வைத்தியசாலைகளில் மருந்துப் பொருள்கள் இல்லாத காரணத்தால் நோயாளிகள் தனியார் மருந்தகங்களை நாடுகிறார்கள். மருந்துத் தட்டுப்பாடு, மருந்துகளின் விலையேற்றம் ஆகிய காரணிகளால் பொது மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான பின்னணியில் தரமற்ற மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. தரமற்ற மருந்து பாவனையால் இதுவரை ஐவர் உயிரிழந்துள்ளார்கள். இந்த உயிரிழப்புக்கு சுகாதாரத்துறை அமைச்சு, தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபை பொறுப்புக் கூற வேண்டும்.

பதிவுசெய்யப்பட்ட மருந்து இறக்குமதியாளர்களுக்கு மருந்து இறக்குமதிக்கு அனுமதி வழங்காமல் புதிய இறக்குமதியாளருக்கு அனுமதி வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்தத் தரமற்ற மருந்து இறக்குமதி விவகாரத்துடன் அரசாங்கத்துக்கு இணக்கமான ஒருவரின் தங்கையின் மகன் தொடர்புப்பட்டுள்ளார் எனக் குறிப்பிடப்படுகிறது. ஆகவே தரமற்ற மருந்து இறக்குமதி தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

தரமற்ற மருந்துகள் ஏதும் இறக்குமதி செய்யப்படவில்லை என சுகாதாரத்துறை அமைச்சர் குறிப்பிடுகிறார். முன்வைக்கும் கேள்விகளுக்கு பதில் இல்லை. அப்பாவி மக்களைக் கொலை செய்யும் செயற்பாடுகளுக்கு இணையான செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபடுகிறது. - என்றார். (05)



# மேன்முறையீட்டு நீதிமன்றங்களை வடக்குக் கிழக்கிலும் அமைக்குக

### சாள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்து

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு வரும் குற்றவியல் வழக்குகளை தமிழ் நீதியரசர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அல்லது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 'நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்' தொடர்பான சபை ஒத்திவைப்பு வேலை விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வரும் குற்றவியல் வழக்கு கோவைகள் தொடர்பில் தாமதங்கள் ஏற்படுகின்றன. இதற்கு வடக்கு மற்றும் கிழக்கு நீதிமன்றங்களில் தமிழ் மொழியில் வழக்குகள் நடப்பதே காரணம்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அந்த கோவைகள் வரும்போது ஆங்கில மொழிபெயர்ப்புகளில் தாமதம் காணப்படுகிறது.

ஆனால் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் தமிழ் நீதியரசர்கள் உள்ளனர். அவர்களிடம் அந்த வழக்குகளை ஒப்படைக்கலாம். இல்லாவிட்டால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும். இதன்மூலம் வழக்கு தாமதங்களைத் தவிர்க்கலாம். - என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, நீதிமன்றங்களில் மொழிபெயர்ப்பாளர்களுக்கு நிலவும் பற்றாக்குறையே இதற்குக் காரணம். இதனைத் தவிர்க்க வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.



- என்றார். தொடர்ந்தும் உரையாற்றிய சார்ள்ஸ் நிர்மலநாதன் - பொய்யான வழக்கு தாக்கல்களும் நீதிமன்ற நடவடிக்கையின் தாமதத்துக்கு ஒரு காரணியாக உள்ளன. உதாரணமாக கடந்த பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் பொலிஸார் எங்கள் மீது வழக்கு தொடர்ந்துள்ளனர். எவ்வித முறைப்பாடும் இன்றி மக்களுக்கு இடையூறு என வழக்கைத் தொடர்ந்துள்ளனர். இது முறையற்றது.

இதேவேளை நீண்ட காலமாக சிறையில் உள்ள அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஜனாதிபதியுடனும் உங்களுடனும் (நீதியமைச்சர்) கலந்துரையாடியுள்ளோம். அண்மையில் தேவதாசன் என்ற புற்றுநோய் நோயாளி விடுதலை செய்யப்பட்டார். அதற்கு அரசுக்கு நன்றி கூறுகின்றோம்.

அத்துடன் நவரத்தினம் மற்றும் மதனசேகரம் என்ற கைதிகள் இருவர் நோய்வாய்ப்பட்டுள்ளனர். அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேவேளை அரசியல் கைதிகள் பலருக்கு புதிதாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

யாராயினும் வழக்கு தாமதங்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் வழக்குதாமதங்களே குற்றங்கள் அதிகரிக்கக் காரணமாக அமைகின்றன. எதிர்காலத்தில் வழக்குகளை வகைப்படுத்தி அதை முடிப்பதற்கு காலவரையறைகளை நிர்ணயம் செய்து அதை விசாரிக்க வேண்டும். - என்றார். (05)

## உள்ளகக் கடன் மறுசீரமைப்புச் செயல் திட்டத்தின் முன்மொழிவுகள் சர்வதேச கடன்மறுசீரமைப்பில் எதிர்மறைதாக்கத்தை ஏற்படுத்தாது

### மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் கருத்து

சர்வதேச கடன் மறுசீரமைப்பு செயன்முறையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தாத வகையிலேயே உள்ளகக் கடன்மறுசீரமைப்பு செயற்திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.



அரசாங்கத்தால் கடந்த வாரம் முன்மொழியப்பட்டுள்ள உள்ளகக் கடன் மறுசீரமைப்பு செயற்திட்டம் தொடர்பில் பல்வேறு கேள்விகள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையிலேயே மத்திய வங்கி ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உள்ளகப் பொதுக்கடன்களின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதே உள்ளகக் கடன்மறுசீரமைப்பு செயற்திட்டத்தின் பிரதான நோக்கமென சுட்டிக்காட்டியுள்ள ஆளுநர் நந்தலால் வீரசிங்க, இந்த முன்மொழிவுகள் சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணையுடன் பெரும்பாகப்பொருளாதாரக் குறிகாட்டிகளை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன எனவும், அதன்மூலம் எதிர்வருங்காலங்களில் முன்நோக்கிப் பயணிக்கும்போது ஏற்படத்தக்க அச்சுறுத்தல்களைக் குறைத்துக்கொள்ள முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை சர்வதேச கடன்வழங்குநர்களுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் சர்வதேச கடன்மறுசீரமைப்பு செயன்முறையில் எந்தவொரு எதிர்மறைத்தாக்கத்தையும் ஏற்படுத்தாத வகையிலேயே உள்ளகக் கடன் மறுசீரமைப்பு செயற்திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி அச்செயற்திட்டம் வெளிப்படையானதும் ஒப்பீட்டு ரீதியானதுமான கருத்தியல்களின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டிருப்பதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெளிவுகுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



## பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிரான செயற்பாடுகளில் அரசு பின்னடைந்துள்ளது

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சாட்டை

பயங்கரவாதத் தடைச் சட்டம் கொடுமையானது என்பதை அரசாங்கமே ஏற்றுக்கொண்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் அரசாங்கம் தற்போது பின்னடைந்துள்ளது.

அரசியல் காரணிகளை முன்னிலைப்படுத்தி செயற்படுவதால் இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 'நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்' தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நீதிமன்றங்களில் வழக்குகள் தாமதப்படுத்தல் மற்றும் அதற்கான காரணிகள் தொடர்பான பிரேரணையை ஏற்கிறோம். இது தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கும் படிநிலைகளுக்கு எமது கட்சி ஒத்துழைக்கும். நீதிமன்றங்களில் சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளில் குற்றவியல் விடயங்களில் சம்பந்தப்பட்டோர் நீண்ட காலம் சிறைகளில் இருக்க வேண்டியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்குகள் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும். அரசாங்கத்தில் பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடியுள்ளோம். இந்த வழக்குகள் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்று கூறியுள்ளோம்.

ஆனால் அரசாங்கம் இந்த விடயத்தில் பின்னடைந்துள்ளது. இதனை அரசியல் விடயமாகப் பார்ப்பதே இதற்குக் காரணமாகும்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் கொடுமையானது என்பதை அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது.

ஆனால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. இந்தச் சட்டத்தின் கீழ் சிறையில் உள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். கைதிகள் பலர் தீர்ப்புக்காகக் காத்திருக்கின்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

சிலருக்கு எதிராகப் புதிய வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இது அநீதியானது. இவர்களை தொடர்ந்து தடுத்து வைத்திருப்பது மிகவும் அநீதியானது.

கொள்கை ரீதியில் தீர்மானம் எடுத்து இந்த சட்டத்தில் சிறையில் உள்ள அனைவரையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (05)

## சர்வதேச கண்காணிப்புடன் கூடிய அகழ்வுப்பணி ஊடாகவே உண்மையை வெளிக்கொணரமுடியும்

### அடித்துக்கூறுகின்றார் செல்வராசா கஜேந்திரன்

கொக்குத்தொடுவாய் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள அகழ்வுப்பணிகளை சர்வதேச கண்காணிப்புடன் முன்னெடுப்பதன் ஊடாக மாத்திரமே உண்மையை வெளிக்கொண்டுவரமுடியுமென தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பகுதியில் தண்ணீர் குழாய்களைப் பொருத்துவதற்காகக் கடந்த மாதம் 29 ஆம் திகதி நிலத்தைத் தோண்டியபோது மனித எச்சங்கள் மற்றும் ஆடைகள் என்பன தென்பட்டதை அடுத்து, அந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து கடந்த 30 ஆம் திகதியன்று அந்த இடத்தைப் பார்வையிட்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிவான், அங்கு 6 ஆம் திகதியன்று வியாழக்கிழமை அகழ்வுப்பணிகளை ஆரம்பிக்குமாறும், அதுவரையில் அந்தப் பகுதியிலுள்ள மனித எச்சங்கள் சிதைவுறாதவண்ணம் பாதுகாக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்தச் சம்பவம் இப்பகுதியில் வாழும் மக்களிடத்தில் மாத்திரமன்றி ஒட்டுமொத்த தமிழ் மக்கள் மத்தியிலும் அச்சத்தைத் தோற்றுவித்திருப்பதாகவும், இது மற்றுமொரு மனிதப்புதைகுழியாக இருக்கக்கூடும் அல்லது வலிந்து காணாமலாக்கப்பட்ட நபர்கள் இங்கு புதைக்கப்பட்டிருக்கக்கூடும் என்று அம்மக்கள் அஞ்சுகின்றனர் எனவும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

'இந்தப் பகுதி கடந்த 2009 ஆம் ஆண்டுவரை இராணுவக்கட்டுப்பாட்டிலேயே இருந்தது. கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் மற்றும் கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் வாழும் மக்களை வெளியேறுமாறு 1984 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினரால் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. 'அங்கிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டதன் பின்னர் அப்பகுதி இராணுவக்கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது' என்று கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் அந்தப் பகுதியில் மனித எச்சங்கள் கண்டறியப்பட்டிருக்கும் நிலையில், அவை வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் சடலங்களாகவோ அல்லது உயிருடன் பிடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளின் உடல்களாகவோ இருக்கக்கூடுமென மக்கள் அஞ்சுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ள அவர், எனவே சர்வதேசக் கண்காணிப்பின்கீழ் உரியமுறையில் அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியுள்ளார்.

'இவ்விடத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய அகழ்வுப்பணிகள் இலங்கை அரசாங்கத்தால் மூடிமறைக்கப்படக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது. எனவே, இது தொடர்பில் சர்வதேச சமூகம் அதன் கரிசனையை வெளிப்படுத்தவேண்டும். இந்த அகழ்வுப்பணியை சர்வதேசக் கண்காணிப்பின்கீழ் முன்னெடுப்பதன் ஊடாக மாத்திரமே உண்மையை வெளிக்கொண்டுவர முடியும் என்பதே எனது அபிப்பிராயமாகும்' என்று கஜேந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளார். (05)

# இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்கள் மீண்டும் செப்ரெம்பரில் தொடங்கும்

### பந்துல நம்பிக்கை

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள பெருமளவிலான வேலைத்திட்டங்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என நம்புவதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் நாடு திவால் நிலைக்கு சென்றதால் அனைத்து வெளிநாட்டு நிதியுதவிகளும் நிறுத்தப்பட்டு பல்வேறு துறைகளில் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் காரணமாக பொருளாதாரம் படிப்படியாக ஸ்திரத்தன்மை அடைந்து வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை விரிவான கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பாக உள்ளூர் மற்றும் சர்வதேசபங்காளிகளுடன் கலந்துரையாடிவருவதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (05)



காலைக்கதிர்
Kalāikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சட்டத்தை இயற்றுவதால் மட்டும் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை

ஊழல் எதிர்ப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வாக்கெடுப்பின்றி சட்டம் நிறைவேற்றப்பட்டதாக அறிவித்தார். எதிர்க் கட்சிகளின் சம்மதத்தோடுதான் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது. எதிர்க் கட்சிகளின் திருத்தங்களை எல்லாம் ஏற்றுக்கொள்வதற்கு ஆட்சியாளர்கள் தயாராகவுள்ள நிலையில், சட்டத்தை நிறைவேற்ற அனுமதி கொடுத்த பின்னர் திருத்தங்களைக் குழு நிலையில் செய்துகொள்ளலாம் என்று அனைவரும் இணங்கி வந்ததைத் தொடர்ந்து சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது நல்ல விடயம்தான். செய்யப்படவேண்டிய மிக முக்கியமான செயலும்கூட. ஆனால், அந்தச் சட்டத்தை முழுமையாக, சரியாக, நேர்மையாக நடைமுறைப் படுத்தும் உளத்துணிபு அரசியல்வாதிகளுக்கு இருக்கின்றதா என்பதுதான் இங்குள்ள பெரும் கேள்வி. இலங்கையில் 13ஆவது திருத்தச் சட்டம் உட்பட பல சிறப்பான சட்டங்கள் உள்ளன. ஆனால் அவை முழுமையாக, நேர்மையாக நடைமுறைப் படுத்தப்படுவதில்லை என்பதுதான் மிகப் பெரும் சங்கடம்.

இப்போது இந்த ஊழல் எதிர்ப்புச் சட்டமும் பன்னாட்டு செலாவணி நிதியத்தின் (ஐஎம்எவ்) வற்புறுத்தலுக்காக மட்டுமே நிறைவேற்றப்படுவதாக இருந்தால் நடைமுறையில் அது பயன்பாட்டுக்கு வருவது சாத்தியமானதில்லை. பெயரளவிலான சட்டமாக மட்டுமே எஞ்சியிருக்கும். ஊழலை ஒழிப்பதற்கான மிக முக்கிய பங்கை ஆற்றுவதில் அது எந்த வகிபாகத்தையும் கொண்டிருக்கப்போவதில்லை.

இந்தச் சந்தேகம் எழுவதற்குக் காரணம் இருக்கின்றது. ஒவ்வொரு முறை ஆட்சி மாற்றத்தின் போதும் ஒருவர் மீது ஒருவர் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதை இங்குள்ள அரசியல்வாதிகள் வழமையாகக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதுவரையில் ஒருவர் கூட அத்தகைய குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டதில்லை.

2015ஆம் ஆண்டு ஊழல் குற்றங்களை விசாரிக்கவென நிதி விசாரணைச் சிறப்புப் பிரிவு நியமிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரிவே ராஜபக் ஷக்களுக்கு எதிராகப் பல வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. ஆனால், ராஜபக் ஷக்கள் 2019இல் ஆட்சிக்கு வந்த பின்னர் இந்தப் பிரிவு செல்லாக்காசாகியது. அந்தப் பிரிவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் பலவற்றில் இருந்தும் ராஜபக் ஷக்கள் விடுவிக்கப்பட்டார்கள். மீண்டும் ரணில்விக்கிரமசிங்க பதவிக்கு வந்த பின்னர் இந்த ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை நடத் த அவரும் முன்வரவில்லை.

ஏற்கனவே பிணைமுறி ஊழல் வழக்கில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநரும் அரசுத் தலைவருக்கு நெருக்கமானவருமான அர்ஜுன மகேந்திரன் மீது குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் அவர் மீது நடவடிக்கை எடுக்காமல் பாதுகாத்தவர் என்ற குற்றச்சாட்டு இன்றைய அரசுத் தலைவர் மீது உள்ளது. அப்படி ஊழல் குற்றச்சாட்டவர்கள் உயர் பதவிகளில் இருக்கும் நிலையில் ஊழல் எதிர்ப்புச் சட்டம் யாருக்கு எதிராக பயன்படுத்தப்படப் போகின்றது என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

எனவே சட்டங்களை நிறைவேற்றுவதால் மட்டும் பயனில்லை. அவற்றை முறையாக நடைமுறைப்படுத்துவதும் அவசியம். அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பல பகுதிகள் கடந்த 36 வருடங்களாக நிறைவேற்றப்படாமலேயே உள்ளதைப் போன்று ஊழல் எதிர்ப்புச் சட்டமும் பேருக்கு ஒரு சட்டமாக இருப்பதால் எந்தப் பயனும் ஏற்படாது. அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நேர்மைத்திறன் அரசியல்வாதிகளுக்கு இருந்தால் மட்டுமே அதனால் பயன் உண்டு.

# பூனையை மடியில் வைத்து...

**என். சத்திய மூர்த்தி**

நாடாளுமன்றத்தில், அரசின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் மீதான வாக்கெடுப்பு நடந்தபோது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் காணாமல்போயிருந்தனர். அது எதிர்பார்க்கப்பட்ட விடயம் என்பதாலோ என்னவோ, அது குறித்து யாரும் கருத்துக் கூறவில்லை. கவலை தெரிவிக்கவில்லை. இதுவே இனி வழமையாகலாம்.



சென்ற வருடம் நாடாளுமன்றம் அப்போது காபந்து பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்தபோதே, இரகசிய வாக்கெடுப்பில் சில தமிழ் உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவாக வாக்களித்தனர் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. தற்போது தனித்து இயங்கும் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சித்தார்த்தன் போன்றோர் அன்று, தமிழ் அரசு கட்சியை உள்ளடக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள். கூட்டமைப்பின் முடிவை எதிர்த்து அவர்கள் வாக்களித்தார்கள் என்று அப்போது சமூக வலைதளங்களில் ஒரு செய்தி பரவியது. அதனை அவர்களில் சிலர் அரைகுறையாகவே மறுத்தார்கள்.

அவர்களுடைய இந்தச் செயலும் கூட்டமைப்பு உடைவதற்கான ஆதார காரணங்களில் ஒன்று. என்ன, அன்று அவர்கள் இரகசியமாக வாக்களித்தார்கள். இன்று, அவர்கள் வாக்களிப்பை புறக்கணித்ததை பரசியமாக, அனைவரும் அறியும்படி செய்துள்ளார்கள். அதில் சிறிது முன்னேற்றம்.

### குரங்கு கையில் பூமாலை

உண்மை என்னவோ, செல்வம்-சித்தார்த்தன் போன்றோர் அரசிற்கு எதிராக வாக்களித்திருந்தாலும், அதனால் அரசின் செயல்திட்டம் நாடாளுமன்றத்தில் தோல்வி அடைந்திருக்காது என்பதுதான். என்ன, இனப்பிரச்சினை விடயத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழர்களை ஏமாற்றுகிறார் என்று சாரப்படும்படி பேசிவரும் இந்தத் தலைவர்கள், அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை என்பதை நினைத்து தமிழர்கள் சந்தோப்படலாம். அல்லது பெருமூச்சு விடலாம்.

இதன் காரணமாகவே, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசின் அனைத்துத் திட்டங்களையும் முனைப்புடன் எதிர்க்கவேண்டும் என்பதல்ல பொருள். வழமையாகவே, இனப்பிரச்சினை அல்லாத எந்தவொரு விடயத்தையும் தமிழர் தரப்பு ஆராய்ந்து பேசி முடிவ எடுப்பதில்லை. அதில், இந்த உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டமும் ஒன்று.

அப்படி இருக்கும்போது, அரசு ஆதரவு அல்லது எதிர் வாக்கு என்பதெல்லாம் எண்ணிக்கையைப் பொறுத்ததே. கருத்தாடல் குறித்தோ, கொள்கை குறித்தோ அல்ல. அந்த விதத்தில், பேரினவாதம் பேசும் ஜேவிபி மட் டுமல்ல, தமிழ் தலைமைகள்கூட, தேசிய அளவில் எதிர்கட்சி அரசியலே செய்து பழகியவர்கள்.

இவர்கள், ஆளும் கட்சியினராக, அமைச்சர்களாக, தங்களை வரிந்து கொண்டு பார்க்காதவர்கள். இவர்கள் கையில் ஆட்சி கிடைத்தால், குரங்கு கையில் கிடைத்த பூமாலை கதைதான். வடக்கு மாகாண முதல்வராக விக்னேஸ்வரன் செயலாற்றிய அழகைத் தான் பார்த்தோமே.

### ஒரு நாள், ஒரு தலைமுறை

தற்போதைய பிரச்சினை ஒன்றும் புதிதல்ல. அது ஒரே நாளிலோ, ஏன், ஒரு தலைமுறையிலோ மாறிவிடப் போவதுமில்லை. ஆனால், அடுத்த ஆண்டு, ஜனாதிபதித் தேர்தலில் இது, எவ்வாறெல்லாம் எதிரொலிக்கும் என்பதே கேள்வி.

தற்போதைய நிலைமையில், அரசை எதிர்ப்போர், அரசை எதிர்க்காதவர்கள் என்று இரண்டாக, தங்களைத் தமிழ் தேசியக் கட்சிகளாக வரிந்துகொண்ட தலைமைகள் பிரிந்து நிற்கின்றன. இவர்களில் தமிழ் அரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது அரசு-எதிர் நிலை என்றே கருதவேண்டும்.

வயது மூப்பு மற்றும் உடல்நிலை காரணமாக, தமிழ் அரசு கட்சியின் மூத்த தலைவர் சம்மந்தன் நாடாளுமன்ற வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. அந்தக் கட்சியை சேர்ந்த சார்ளஸ் நிர்மலநாதனும் வாக்களிப்பில் பங்குபெறவில்லை. கட்சியின் மற்ற நான்கு உறுப்பினர்களும் அரசிற்கு எதிராக வாக்களித்தனர். இதில் பிரச்சினை என்பது, குறிப்பிட்ட அரச திட்டங்களின் மீதான தமிழ் அரசு கட்சியின் நிலைப்பாடு அல்ல. மாறாக, அரசு எதிர்நிலை எடுத்துள்ள மற்றொரு கட்சியான, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தென்னிலங்கை அரசியல் தான்.

### தான் பிடித்த முயலுக்கு...

அண்மை காலங்களில், அவர் தனது தமிழ் காங்கிரஸ் கட்சியையும் அது தலைமையேற்றுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியையும் தென்னிலங்கை அரசியலில், எதிர்கட்சியான சஜித் பிரேமதாசா தலைமையிலான மக்கள் சக்தியுடன் அடையாளப்படுத்தி கொண்டுள்ளார். அவர்களுடைய கூட்டணி பேச்சுக்களிலும் பங்கு பெற்று வருகிறார்.

இனப்பிரச்சினைதீர்வுவிடயத்தில், கஜன் பொன்னம்பலம், தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்ற நிலைபாடு எடுத்து கனகாலம் ஆகிவிட்டது. இந்த பின்னணியில், அவரை அருகில் வைத்துக்கொண்டு, சஜித்தலைமைஎந்தவிதமானஅரசியல் தீர்வை முன்வைத்து விடமுடியும்? பூனையைமடியில்வைத்துக்கொண்டு சகுனம் பார்த்த கதை தான்.

கஜன் விடயம் இப்படியென்றால், ரணில் கூட்டமைப்பின் வாசல் கதவு வரைசென்றுவிட்டுஅங்கேயேதயங்கி, தயங்கி நிற்கும் விக்னேஸ்வரன், செல்வம் மற்றும் சித்தார்த்தன் போன்றேரை குறித்து என்ன சொல்ல? இதில் சித்தார்த்தனை விட்டுவிடுவோம். விக்னேஸ்வரனும் செல்வமும் தலைமை தங்கள் அரசு ஆதரவு அமைப்பிற்கான தலைமை பதவியை விட்டுக்கொடுப்பார்களா, என்ன?

இது தவிர, அரசு ஆதரவு என்று கல்தோன்றி மண்தோன்றா காலத்தில் இருந்து டக்ளஸ் தேவானந்தா, தென்னிலங்கையின் நம்பிக்கைகுரிய, பிரச்சினை செய்யாத தமிழ் தலைவராக இருந்து வருகிறார். காலம்சென்ற மலையக தமிழ் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டைமானை போல், தேவானந்தாவும் அரசஆதரவுடன் மட்டுமே தங்களது மக்களுக்கு ஏதாவது நல்லது செய்யமுடியும் என்று திடமாக நம்புகிறார். அவரது அரசியலும் அதனை சுற்றியே இருந்து வந்திருக்கிறது.

### சிறிசேனாவின் திக் விஜயம்

இது தவிர, நாடு தழுவிய அளவில் சுதந்திர கட்சியின் ஒரே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், யாழ் மாவட்டத்தின் அங்கஜன் ராமநாதன்தான். கட்சி தலைவர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா உள்ளிட்ட சுதந்திர கட்சி நாடாளுமன்றஉறுபப்பினர்கள், ராஜபக்ஷக்களின் மொட்டு சின்னத்தில் கடந்த 2020 நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றவர்கள்.

சிறிசேனா அண்மைக் காலத்தில், வட மாகாணத்தில் மூன்று நாள் பயணம் மேற்கொண்டிருந்தார். பிற தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் போலவே, நல்லூர் முருகன் கோவிலிலும் பூசை செய்தார்.

சிறிசேனாவின் இந்த திக் விஜயத்தை வைத்து கணக்கிட்டால், ஜனாதிபதி பதவி மீது அவருக்கு இன்னமும் ஒரு கண் இருக்கிறது என்றே எண்ணத்தோன்றுகிறது. தென்னிலங்கையின் தேர்தல் கணக்குகளின் படி, அடுத்த வருடம் நடைபேற வேண்டிய ஜனாதிபதி தேர்தலில் ரணில் போட்டியிடுவது உறுதி. அவரை எதிர்த்து போட்டியிடுவதற்கு தகுதியான வேட்பாளர் இல்லை என்பதும் நிஜம். பெயரளவில் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசாவின் பெயர் இது குறித்த பேச்சுகளில் அடிபடுகிறது. என்றாலும் அவர் ரணிலுக்கு 'டஃப்' கொடுக்க மாட்டார் என்ற எண்ணம் எதிர்கட்சி தலைவர்களிடையே பரவலாக இருக்கிறது. அவரது சொந்தக் கட்சியின் உள்ளேயே, அவருக்கு எதிர்ப்பு உள்ளது. அதற்கு ஜாதியும் ஒரு காரணம். ஆனால், இருபத்தியோராம் நூற்றாண்டு, இலங்கை அரசியல் பரப்பில் யாரும் ஜாதி குறித்து பேசுவதில்லை. அவ்வளவு தான்.



தென்னிலங்கை அரசியலில், தற்போது ரணிலை ஆதரிக்க தயாராக இருக்கும்வாக்காளர்களில் பலரும் அவர் சார்ந்திருக்கும்ராஜபக்ஷாக்களை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. இதன் காரணமாகவே, ராஜபக்ஷாக்களின் ஆதரவுடன் களமிறங்கும் ரணிலை யும் சந்தேக கண்ணுடனேயே பார்க்கிறார்கள்.

### அதீத நம்பிக்கை, அகம்பாவம்

ஜனாதிபதி ஆசையில் மிதக்கும் சரத் பொன்சேகா மற்றம் பட்டாளி சம்பிக ரணவக்க ஆகியோரையம் தென்னிலங்கைமக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதேசமயம், கருத்துக் கணிப்புகளில் முன்னிலை வகித்துவந்த ஜேவிபி தலைவர் அனுர குமார திசநாயக்க, ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட கூடாது என்பதில் பல்வேறு தரப்புகள் முனைப்பாக இருக்கின்றன. தேர்தல் அரசியலுக்கு அப்பால், பொருளாதார கொள்கை அடிப்படையிலும், ஜேவிபியை, செல்வாக்கும் சக்தியும் உள்ள சில தரப்புகள் தோற்கடிப்பதற்கான முன்னெடுப்புகளை எடுக்கும் என்று எதிர் பார்க்கலாம். இவர்களது, திரைமறைவு வேலைகளின் காரணமாக தான், அப்போது பதவியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து, முறையே சரத் பொன்சேகாவும் (2010) சிறிசேனாவும் (2015) களமிறக்கப்பட்டனர்;. அவர்களில், சிறிசேனா வெற்றிபெற்றார்.





இந்த பின்னணியில், ரணிலை எதிர்த்து தன்னை ஆதரிப்பது தவிர, எதிர் கட்சிகளுக்கும், ஏனைய தரப்புகளுக்கும் வேறு வழி இல்லை என்று சிறிசேனா கணக்கிடுகிறார் என்றே தோன்றுகிறது. ஆனால், இது குறித்து, எங்கேயோ, ஏதாவது பேச்சு தொடங்கி விட்டதா. என்பது தெரியவில்லை.

காரணம், கடந்த 2015 ஜனவரி தேர்தலுக்கு சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னரே, அதாவது, 2013 மத்தியிலேயே, மஹிந்தாவை எதிர்த்து அவரது வலதுகரமான சிறிசேனாவே போட்டியிடுவார் என்பது முடிவாகிவிட்டது. ஆனாலும், ராஜபக்ஷ தரப்பு மட்டும் அதனை கடைசி நிமிடம் வரை நம்பவில்லை. எனவேதான், சிறிசேனா 2015 தேர்தல் காலத்தில் தனது காலை வாரிய போது, தன்னுடன் முந்தைய இரவுதான் ஆப்பம் சாப்பிட்டார் என்றெல்லாம் மஹிந்தா புலம்பும் நிலைமை ஏற்பட்டது. அதுவே அவரது, அதீத தன்னம்பிக்கை அல்லது அரசியல் அகம்பாவத்தின் வெளிப்பாடாகவும் மாறியது.

இவ்வாறேதான், முந்தைய 2010 தேர்தலில் சரத் பொன்சேகா தன்னை எதிர்த்து போட்டியிட்டபோதும், மஹிந்தாவால் முதலில் நம்பமுடியவில்லை. ஆனால், இனப்போருக்கு பிந்தைய அந்த தேர்தலில், பொன்சேகாவின் இராணுவப் பின்னணியும் அவருக்கு எதிராக தென்னிலங்கையில் வேலை செய்தது. தென்னிலங்கைவாக்காளர்கள் அதனை, விடுதலை புலிகள் அமைப்பின் தீவிரவாதத்தின் தோல்வி குறித்த தேர்தல் என்று கருதவில்லை. மாறாக, ஒரு அடி முன்னே சென்று, அது ஜனநாயகத்திற்கும் இராணுவத்திற்குமான இடையேயான தேர்தல் என்று கருதினார்கள். அதிலும் குறிப்பாக, பொன்சேகா தனது தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் ராஜபக்ஷக்களை தூக்கிலிடுவேன், சிறையில் அடைப்பேன என்றெல்லாம் பேசியதை அந்த மக்கள், இராணுவ ஆட்சிகான அடித்தளம் என்றே கருதினார்கள். இதனால்தான், அந்த தேர்தலில் மஹிந்தவின் பெரு வெற்றி சாத்தியமானது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir




# கல்வியியல் சிந்தனைகள்




**முன்னுரை**

கல்வி கடல் போன்றது. ஆனால் கரையற்றது. எல்லையின்றி விரிந்து காணப்படும். அளவற்ற ஆழம் உடையது. இத்தகைய ஆற்றலுடைய கல்வியை 'அணுவைத் துளைத்தேள் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என ஔவையாரால் போற்றப்படும் திருக்குறளில் கல்வியியல் சிந்தனைகள் எவ்வாறு திறம்பட எடுத்தியம்பப்பட்டுள்ளது என்பதைக் காண்போம்.

**மன்னரும் மாசறக் கற்றோரும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையான்
மன்னனுக்குத்தன்தேசமல்லால்சிறப்பில்லை
கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு**



அதாவது மன்னரையும் நன்றாகக் கற்ற ஒருவரையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மன்னனிலும் கற்றவர் சிறப்புடையவராக கருதுவர். ஏனென்றால் மன்னனுக்கு தன் நாட்டைத் தவிர வேறு எங்கும் சிறப்பில்லை கற்றோருக்குச் செல்லும் இடமெல் லாம் சிறப்பு இதுவே கல்வியின் சிறப்பு ஆகும். 'படிக்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே மேல் என்கின்றார்.' பேரறிஞர் பிளாட்டோ. ஒருவன் படிக்காமல் இருப்பானேயானால் அவனது பிறப் பிற்கே அர்த்தம் இல்லை எனவும் கூறுகின்றார்.

கல்வி இல்லா நிலம் களர்நிலம் அதில் புல் விளைந்திடலாம். நல்ல புதல்வர்கள் தோன்றுவ தில்லை என்கின்றார் பாரதிதாசன். பெற்றோர்கள் கற்றிருந்தால்தான் பிள்ளைகளும் கற்பார்கள் என்பது அவரது கொள்கை வள்ளுவரும் கல்வியில் சிந்தனைகளை அரசியல் எனும் பகுதியிலும் எடுத்துரைக்கிறார். காரணம் மன்னன் கற்றிருந்தால் தான் அவனது ஆட்சிக்கு உட்பட்ட மக்களும் கற் பார்கள் மன்னனும் தனது மக்களுக்குக் கல்வியை ஊட்டுவான் என்ற நோக்கில் எடுத்துரைக்கிறார். மேலும் அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்ற அதிகாரங்களிலும் கல்வியைப் பற்றி சுட்டிச் சொல்கின்றார். இவர் எழுதிய 1330 குறள்பாக்களில் 80 குறட்பாக்கள் கல்வி தொடர்பான செய்தி களைக் கூறுகின்றன.

'பிசசை புகினும் கற்கை நன்றே' என்கிறார் ஔவையார். அதாவது பிச்சை எடுத்தாவது கல்வி கற்கவேண்டும் என்பது அர்த்தமல்ல பிச்சை எடுக்கும் நிலையிலிருந்தாலும் கற்க வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும். 'உடையார் முன் ஈல்லார் போல் ஐயக் கற்று கற்றார்' என்கிறார் வள்ளுப் பெருந்தகை அதாவது கற்பவர்கள் பொருள் இருப்பவரிடம் கைகட்டிப் பணிந்து பொருள் வாங்குபவர்களைப் போல் கற்றவர்களிடத்தில் பணிந்து கற்கவேண்டம் என்பதனைக் குறள் ூலம் விளக்கு கிறார்.

கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதனை 'மரங்கொல் தச்சன் கைவல் சிறா அர் மழவுடைக் காட்டகத்தற்றே எத்திசைசெலினும் அத்திசைச் சொறே' எனும் தொடர் உணர்த்துகிறது. இதில் மர வேலைகளைச் செய்யக்கூடிய தச்சன் ஒருவன் ஆயுதங்களைக் கையில் கொண்டு காட் டிற்குள் சென்றேனேயானால் அவன் எத்திசையில் சென்றாலும் அத்திசைக் காட்டு மரங்களைக் கொண்டு மரத் தளபாடங்கள் செய்து பொருள் ஈட்டி உண்டான் அதேபோன்று கல்வி கற்ற ஒருவன் தான் கற்ற கல் வியைக் கொண்டு எந்தத் தேசங்களிற்குச் சென்றாலும் பிழைத்துக் கொள்ள இயலும். அத்தகைய கல்வியை கசடற கற்க என்றார். செல்வங்களுள் நிலையான அழிவில்லாத செல்வம் கல்விச் செல்வமாகும். இககல் வியை திருடர்களால் களவாடிச் செல்ல இயலாது தீயினால் எரித்துவிட முடியாது. நீரினால் அடித்துச் செல்ல இயலாது. இதுவே கேடில் விழாச் செல்வம ாகும் நாம் சம்பாதித்த செல்வங்கள் அனைத்தும் இறக்கும் தருணத்தில் எடுத்துச் செல்ல இயலாது. ஆனால் கல்வியை எடுத்துச் செல்ல இயலும்.

இதனையே ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவரிற்கு எழுமையும் ஏமாப்புடைத்து எனக்குறிப்பிடப்படுகின்றது. அதாவது ஒரு குழந்தை சிறுவயதில் பல சாதனைகள் செய்வதை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். அந்தச் சாதனை அக்குழந்தை அப்பிறப்பால் கற்ற கல்வியால் செய்வன அல்ல. முற்பிறவியில் கற்ற கல்வி சிறுவயதில் சாதிக்க வைத்திருக்கிறது. அதனையே எழுமையும் ஏமாப்புடைத்து எனும் தொடர் உணர்த்துகிறது.

வள்ளுவர் கல்வியைத் தொடடனைத்தூறும் மணற்கேணி என்கிறார். ஏனென்றால் மண்ணைத் தோண்டத் தோண்ட நீர் சுரப்பது போல நூல்களைக் கற்க கற்க அறிவு பெருகும் என்பதனால் கூறுகிறார். தண்ணீரானது பூமியின் எல்லா இடங்களில் இருந்தும் பெறமுடியாது. நீர் காணப்படும் இடத்தில் மாத்திரம் தான் பெறமுடியும். அதைப் போலவே எல்லோருக்கும் எல்லா அறிவும் இருக்கும் என்பதைக் கூறமுடியாது. அறிவு என்பது ஒவ்வொருவருக்கும் இடையில் வித்தி யாசப்படக்கூடிய ஒன்று. அவரவர்களுக்குள்ள திறமை கள் சார்ந்த நூல்களைக் கற்கும் போதுதான் அறிவு மேலும் இதனை வள்ளுவர் கற்றதனைத் தூறும் அறிவு எனக்குறிப்பிடுகின்றார்.

கற்பவர்கள் மற்றவர்கள் கூறுவதை அப்படியே ஏற்றுக் கொள்வது அறிவுடைமையாகாது. அதில் உண்மை எது? பொய் எது? என உய்ததுணர்தலே அறிவுடமையாகும். இதனை அறியத்தெரியாதவர் கற்றவராயினும் 'கல்லாதவரின் கடை என்ப' எனக் கூறுகிறார் வள்ளுவர்.

'கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என வள்ளுவர் கூறும் குறளுக்கு இணங்க வெறுமனே கற்றால் மட்டும் போதாது. அக் கல்வியைக் கொண்டு வாழவும் வேண்டும். எனவே நாம் கல்வியை ஐயம் திரிபுறக் கற்றுச் சிறப்புடன் வாழ்வோமாக.

# ஒழுக்கம் விழுப்பம் தரலான்

**ஒழுக்கம் என்பது நீதி நூல்களில் சொல்லப்பட்ட படியும் நம் முன்னோர்கள் நடந்து காட்டிய படியும் ஒழுகு-வதாகும் நல்லொழுக்கம் என்பது நன்னடத்தையைக் குறிக்கும் எமது ஆதிமக்கள் அவர்களது வாழ்க்கைகைய நான்கு படிகளாக பிரித்துள்ளனர். அவை இல்லற வாழ்க்கை என்பனவாகும்.**



'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்கின்றார் முதற்பாவலர். ஒரு மனிதனது வாழ்க்கையில் ஒழுக்கம் ஆனது அவனது உயர்வுக்கு காரணமாக இருப்பதனால் இவ்வொழுக்கம் உயிரினை விட மேலாக பார்க்கப்படுகின்றது. ஒழுக்கம் இல்லாத ஒருவர் வாழ்வில் முன்னேறிய சரித்திரமே இல்லை. மாறாக துன்பங்களை சந்திப்பார். விளைச்சலை தராத வயல் வீண் என் பதுபோல் ஒழுக்கத்தை தராத கல்வியும் பயன் அற்றது என்பார்கள்.

ஒழுக்கம் என்பது நீதி நூல்களில் சொல்லப்பட்ட படியும் நம் முன்னோர்கள் நடந்து காட்டிய படியும் ஒழுகுவதாகும் நல்லொழுக்கம் என்பது நன்னடத்தை யைக் குறிக்கும் எமது ஆதிமக்கள் அவர்களது வாழ்க்கைகைய நான்கு படிகளாக பிரித்துள்ளனர். அவை இல்லற வாழ்க்கை என்பனவாகும்.

இவ் ஒவ்வொரு படிகளிலும் ஒழுக வேண்டிய ஒழுக்க நெறிகள் பற்றி நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.

நாம் நினைக்கும் அனைத்தையும் நிறைவேற்றவேண்டும்என்றஆசைமனி தர்களுக்கு இருக்கக்கூடாது. ஆசையே நமது எல்லாத் துன்பங்களுக்கும் காரண மாக உள்ளது என்று புத்தபெருமான் போதி க்கிறார். எமது உள்ளங்களில் புயல்பொல் எழும் சஞ்சலங்களை யாரெல்லாம் அடக்கியாளக் கற்றுக்கொள்கிறார்களோ அவர்கள் தான் பின்னாளில் நல்ல ஒழுக்கம் உடைய ஒரு சிறந்த ஒழுக்க சீலர்களாக வாழ முடியும் என்பதால் தான் தனிமனித ஒழுக்கம் என்பது முக்கியம் பெறுகின்றது.

**'ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்'** என்கிறார் தெய்வப் புலவர். அதாவது ஒழுக்கம் உடைய ஒருவரது வாழ்க்கையை உயர்ந்த குடியில் பிறந்தவர் என்றும் அவ் ஒழுக்கத்தில் இருந்து தவறினால் தாழ் குடிப்பிறப்பிற்கு தள்ளப்படுவார். ஒழுக்கம் இல்லாவிடின் ஏற்படும் பிரச்சினைகள் பார்த்தீர்களா? ஒரு சிறிய தவறை விட்டாலும் அது அவனது குடிப்பெரு மையை அசிங்கப்படுத்தி விடுகிறது. இதை உணர்ந்து நம் முன்னோர்கள் ஒழுக்கத்தில் இருந்து தவறாமல் வாழ்ந்து வந்தனர்.

**'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தப்பழி'** என்கிறார் பொய்யாமொழியில் வள்ளுவர். அதாவது ஒழுக்கம் இல்லாத ஒருவர் தான் அடைய வேண்டாத பெரும் பழியை அடைவர். ஒரு வியாபாரி நேர்மையாக பொருட்களை விற்பனைசெய்து வந்தான். அருகில் இன்னொரு வியாபாரியும் கலப்படம் செய்த பொருட்களையும் விலையைக் கூட்டி விற்றுக் கொண்டிருந்தான். இருவரிடமும் பொருட்களை வாங்க சில வாடிக்கையாளர்கள் வந்தனர். பின்னாளில் மற்றைய வியாபாரி செய்யும் விளையாட்டுக்கள் தெரிந்தது. இவரிடம் வாங்கும் பொருட்களை மற்ற வியாபாரியிடம் வாங்கினர். இதைப் பார்த்த வியாபாரி தனது பிழைகளை உணர்ந்து தானும் நேர்மையாக பொருட்களை விற்பனை செய்தான். பின் இருவரிடமும் சமனான எண்ணிக்கையிலான மக்கள் வந்தனர்.

வறுமையிலும் நேர்மையாகவும் கல்வியை கைவிட்டுவிடாமலும் ஒழுக்கத்தை கைப்பற்றி வந்த ஒரு செருப்பு தைக்கும் வியாபாரியின் மகனான ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதியானார்.

அதேபோல் ஒரு பத்திரிகை போடும் சிறுவன் உலகம் போற்றும் விஞ்ஞானி ஆகியதன் காரணம் அவரது ஒழுக்கமே ஆகும்.

இத்தனை சோதனையின் நடுவிலும் உண்மை பேசி ஒழுக்கத்தை காத்த அரிச்சந்திரன் பின்னாளில் தான் இழந்துபோன நாட்டையும் மனைவியையும் மகனையும் மீளப்பெற்று துயர் இன்றி வாழ்ந்தான். எனவே நாமும் இவ் நல்லொழுக்கங்களைப் பின்பற்றி நடப்போம்.

'அழுக்காறு உடையான் கண் ஆக்கம் போன்று இல்லை ஒழுக்கமிலான் உயர்வு' என்கிறார் பொய்யாமொழிப் புலவர். அதாவது பொறாமை உடையவனிடம் செல்வம் இல்லாதது போல் ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இல்லை. இதை உணர்ந்து எமது ஒழுக்கமே உயிர் என்பதை கைக்கொண்டு வாழவேண்டும். எனவே பொறாமையுடன் செயற்படாமல் நல்லொழுக்கத்துடன் செயற்படுவோம்.

எய்துவர் எய்யாதாப் பழி' என்கிறார் பொய்யா மொழிகளியில் வள்ளுவர். அதாவது ஒழுக்கம் இல்லாத ஒருவர்

தற்போது எமது உலகம் சீரழிந்த சமுதாயமாக மாறிவிட்டது. இதை நினைக்கவே என்மனம் மேலும் மேலும் வருத்தம் கொள்கிறது. போதைப்பொருள் என்பது எமது சமுதாயத்தில் அதிகமாகி விட்டது. புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல் இவையெல்லாம் சிறந்த செயல் அல்ல. இவற்றால் சுவாச சம்பந்தமான, ூளை சம்பந்தமான பல நோய்கள் ஏற்படுகின்றது. எனவே பாடசாலை மாணவர்களாகிய நாய் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இவையெல்லாம் ஒழுக்கம் இல்லாத ஒருவன் தான் செய்வான். நல்ல ஒழுக்கத்தை கடைப்பிடிக்காமல் வாழ்ந்தவர்களுக்கு சிறிது காலம் அவை சுவையாகத்தான் இருக்கும். பின்னாளில் அது துன்பங்களை மெதுமெதுவாக செய்யத்தொடங்கும். எல்லாச் சொத்துக்களையும் இழந்து நடுத்தெருவில் நிற்பார்கள். எனவே இச் சமுதாயத்தை மாற்றி அமைப்போம். விரைவில் மாற்றம் வரும்.

**செல்வி. பதுஜனா கெனட் விஜியேந்திரன்**
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

காலைக்கதிர் Kalaikkathir

# கப்பம் பெற்றவர்கள் அமைச்சரவையில் இருக்கையில் மக்கள் எவ்வாறு நாட்டின் நீதித்துறையை நம்புவர்:?

## விஜித ஹேரத் கேள்வி

கப்பம் பெற்ற விவகாரத்தில் நீதிமன்றத்தில் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டவர்கள் அமைச்சரவை உறுப்பினர்களாக இருக்கும்போது நாட்டு மக்கள் எவ்வாறு நீதித்துறையின் மீது நம்பிக்கை கொள்வார்கள்.

அரசியல்வாதிகள்மனிதபடுகொலையிலும் ஈடுபடலாம் அவர்களுக்கு ஒரு நீதி சாதாரண மக்களுக்கு பிறிதொரு நீதி என்ற நிலையே காணப்படுகிறது என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 'நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்' தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் முறையாக செயற்படுத்தப்பட வேண்டும். ஏட்டில் உள்ள சட்டங்கள் சமத்துவமான முறையில் செயற்படுத்தப்படுகின்றனவா என்பது பிரதான பிரச்சினையாக உள்ளது. சட்டத்தை நடைமு-றைப்படுத்தும் நிறுவனங்களின் செயற்பாடுகளிலும் பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன.

வெளிநாட்டு முதலீடுகள் குறைவடைந்ததால் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது என ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். பொருளாதாரப் பாதிப்பு இயற்கையாக நேர்ந்ததொன்றல்ல.



பொருளாதாரப் பாதிப்புக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதாரப்படுகொலையாளர்கள் சுதந்திரமாக சுற்றித் திரியும் போது பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய முடியாது.வெளிநாட்டு முதலீட்டாளர்களும் நாட்டின் மீது நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். கந்தளை சீனிதொழிற்சாலையை அபிவிருத்தி செய்ய இந்திய நிறுவனம் முதலீடு செய்த போது தொழிற்சாலையில் இருந்த 50 கோடி ரூபா பெறுமதியான பழைய இரும்புகளை விற்பனை செய்யும் விவகாரத்தில் ஜனாதிபதியின் செயலணியின் அதிகாரி உட்பட உயர் அதிகாரிகள் இலஞ்ச ஊழல் ஒழிப்பு அதிகாரிகளிடம் அகப்பட்டார்கள்.

கடந்த காலங்களில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருகை தரும் போது பஸில் ராஜபக்ஷ அதிகாரத்தில் இருக்கிறாரா, இல்லையா என்று பார்ப்பார்கள். அவர் இருந்தால் திரும்பி சென்று விடுவார்கள். இது நாட்டு மக்கள் அறிந்த உண்மையே. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எவருக்கும் கப்பம் செலுத்தாமல் தமது முதலீடுகளை செய்வது உலக அதிசயமாகும்.

நாடுவங்குரோத்துநிலைஅடைந்துள்ள பின்னணியிலும் கப்பம் பெறும் கலாசாரம் இல்லாதொழிக்கப்படவில்லை. நீதிமன்றம் சுயாதீனமாக செயற்பட்டால் மாத்திரமே நாட்டு மக்கள் நீதிமன்றக் கட்டமைப்பின் மீது நம்பிக்கை கொள்வார்கள்.

மரண தண்டனை குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டவர்கள், கப்பம் பெற்றவர்கள் பல வழிமுறையில் சட்டத்தில் இருந்து தப்பித்து அமைச்சரவையில் அங்கம் வகிக்கிறார்கள். ஆனால் சாதாரண மக்கள் சிறு குற்றம் செய்தாலும் அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதுவே இன்றைய உண்மை நிலை. சட்டவாட்சி கோட்பாடு முறையாக செயற்படுத்தாமல் ஒருபோதும் மாற்றத்தை எடுத்த முடியாது. - என்றார். (05)

# தரமற்ற மருந்துப் பொருள்களின் இறக்குமதி தொடர்பில் அவதானம் செலுத்தவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

நாட்டில் விற்பனைக்காக இருக்கும் மருந்துப் பொருள்களின் உற்பத்திப் பாதுகாப்பு மற்றும் தரம் தொடர்புடைய தரநிலைகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்ய வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'நாட்டில் விற்பனைக்காக இருக்கும் மருந்துப் பொருள்களின் உற்பத்திப் பாதுகாப்பு, தரம் மற்றும் செயல்திறனுக்கான தொடர்புடைய தரநிலைகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்து, பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பது தேசிய



மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையின் பணியாகும்.

எவ்வாறாயினும், தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையின் நிர்வாகிகள் அந்நிறுவனத்தில் பணியாற்றிய அனுபவம் வாய்ந்தவர்களை விடுவித்து அவர்களின் விருப்பத்துக்கேற்ப செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, உகந்த மருந்துகள் ஒழுங்குமுறை செயல்முறை இல்லாத காரணத்தால், தரமற்ற மருந்துகள் இலங்கைக்குள் இறக்குமதி செய்-யப்பட்டுள்ளனஎனவும்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய செயல்களின் விளைவாக, சிலர் உயிரிழந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

எனவே, மக்களின் சுகாதார விடயத்தில் அதிக கவனம் செலுத்தி, அதிகாரிகளின் இதுபோன்ற செயல்களை கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்' என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

## புனித மக்காவிற்கு சென்ற இருவர் சாவு

மக்கா யாத்திரைக்குச் சென்ற இரு இலங்கையர்கள் உயிரிழந்தனர் என முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஒருவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளதோடு, மற்றையவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



# முத்து ராஜாவை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவது சாத்தியமில்லை

## தாய்லாந்து அமைச்சர் கூறுகின்றார்

முத்து ராஜா (சக்சுரின்) யானையை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்போவதில்லை என தாய்லாந்து தெரிவித்துள்ளது.

சக் சுரினிற்கு தற்போது தாய்லாந்து மன்னர் ஆதரவளிப்பதால் அதனை இலங்கைக்கு மீண்டும் திருப்பி அனுப்பப்போவதில்லை என தாய்லாந்தின் இயற்கை வள சூழல் விவகார அமைச்சர் பீ.பி.எஸ். ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு திருப்பி அனுப்புவது குறித்த கேள்விக்கே இடமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து யானையை திருப்பிஅனுப்பவேண்டும் என இலங்கையின் சிரேஷ்ட மதகுரு ஒருவர் விடுத்துள்ள வேண்டுகோள் குறித்து பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குதாய்லாந்து வழங்கிய ஸ்ரீநரோங், பிரதுபா என்ற ஏனைய இரண்டு யானைகளும்நல்லநிலையில் காணப்படுகின்றன. இலங்கையிடம் அவற்றை பராமரிக்கும் திறன் உள்ளது. அவைநல்ல நிலையில் உள்ளன. ஒரு யானைக்கு மாத்திரம் சிறிய காயம் ஏற்பட்டுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (05)

# நிந்தவூர் பொலிஸ் நிலையம் புது இடத்தில் திறந்து வைப்பு









அம்பாறைமாவட்டம் நிந்தவூர்பிரதேசத்தில்இட மாற்றப்பட்ட புதிய பொலிஸ்நிலையம்புதன்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021.11.29 அன்று உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டிருந்த நிந்தவூர் பொலிஸ் நிலையம் தற்போது கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதி அமைந்துள்ள புதிய இடத்துக்கு மாற்றப்பட்டு உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ. எம்.நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயசிறி பிரதம அதிதியாக கலந்து கொண்டு புதிய பொலிஸ் நிலையத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர். எம்.டி.ஜெயந்த ரத்னாயக்க, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி.எம். எல். புத்திக, நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எம் .அப்துல் லத்தீப், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனீபா, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம்.றயீஸ் உட்பட சர்வமத தலைவர்கள்மற்றும்முக்கியஸ்தர்கள்பலரும்கலந்து கொண்டனர். மேலும் இதன் போது அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயசிறி குறித்த பொலிஸ் நிலையத்தை இணைத்து அமைக்கப்பட்ட டென்னிஸ்விளையாட்டுகூடத்தை பார்வையிட்டதுடன் டென்னிஸ் விளையாட்டிலும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் பொலிஸ் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் உட்படபலரும்கலந்துகொண்டனர். (05)









# இராகலை கீழ்பிரிவில் 20 வீடுகளைக்கொண்ட நெடுங்குடியிருப்பில் தீ; 75 பேர் வரை நிர்க்கதி

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இராகலை கீழ்பிரிவில் 20 வீடுகளைக்கொண்ட நெடுங்குடியிருப்பில் கடந்த புதன்கிழமை காலை 10.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 20 வீடுகள் முற்றாக எரிந்து தீக்கிரையாகின.

இந்த வீடுகளில் குடியிருந்த 20 குடும்பங்களை சேர்ந்த 75 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தோட்டத்தில் ஆறாம் இலக்க நெடுங்குடியிருப்பிலேயே இவ்வாறு தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸாருக்கும், தீயணைப்பு பிரிவினருக்கும் தகவல் வழங்கப்பட்டது. எனினும், அப்பகுதி மக்கள் மாத்திரம் ஒண்றிணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினர்.

இந்தத் தீவிபத்தால் உயிர்சேதம் எதுவும் ஏற்படாதபோதிலும், பெருமளவில் பொருட் தேசங்கள் ஏற்பட்டுள்ளன. வீட்டு உபகரணங்கள், முக்கிய ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன என்று மக்கள் தெரிவித்தனர். ஒரு சில பொருள்கள் மாத்திரமே மக்களால் பாதுகாக்கக் கூடியதாக இருந்தது.

பாதிக்கப்பட்டவர்களை தோட்ட வைத்தியசாலையில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகமும், அனர்த்த முகாமைத்துவ நிலையம், நுவரெலியா பிரதேச சபை ஆகியன ஊடாகவும் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை என தெரிவிக்கும் இராகலை பொலிஸார், நுவரெலியா பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர். (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்

காலைக்கதிர் Kalaikkathir

# குற்றவியல் மேல்நீதிமன்ற வழக்குகளில் மூன்றில் ஒரு பகுதி சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக குற்றச்சாட்டுகளே

## வெட்கம் என்கிறார் நீதி அமைச்சர் விஜயதாஸ



குற்றவியல் மேல் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளில் மூன்றில் ஒரு பகுதி சிறுவர் மற்றும் பெண் துஷ்பிரயோக குற்றச்சாட்டு வழக்குகளாகும். இலங்கையர் என்ற ரீதியில் இதனையிட்டு வெட்கமடைய வேண்டும்.

நாடளாவிய ரீதியில் உள்ள நீதிமன்றங்களில் ஒட்டுமொத்தமாக 1,1276,25 வழக்குகள் நிலுவையில் உள்ளன என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 'நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்' தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளமையை நியாயப்படுத்த முடியாது. மொத்தசனத்தொகையில் 10லட்சம் பேருக்கு 18 நீதிபதிகள் இருக்கின்றமை சிறந்த சூழலல்ல. 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 174 நீதிமன்றங்களை ஸ்தாபிக்குமாறு பல்வேறுதரப்பினர் வலியுறுத்தினார்கள். பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் புதிய நீதிமன்றங்கள் மற்றும் நீதிமன்றக் கட்டடத்தொகுதிகளை ஸ்தாபிப்பது சாத்தியமற்றதாகியது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் புதிதாக 30 நீதிமன்றங்களை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய எதிர்வரும் 11 ஆம் திகதி இரத்தினபுரி மாவட்டத்தில் புதிய நீதிமன்ற கட்டடத்தொகுதி திறந்து வைக்கப்படவுள்ளது. அத்துடன் வெலிமடை பகுதியிலும் புதிய நீதிமன்றம் இந்த மாதத்துக்குள் ஸ்தாபிக்கப்படும்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு அமைய உயர்நீதிமன்ற நீதியரசர்களின் எண்ணிக்கை 17 ஆக அதிகரிக்கப்பட்டது. உயர்நீதிமன்றத்தில் 5 ஆயிரத்து 482 வழக்குகள் நிலுவையில் உள்ளன. ஆகவே ஒரு நீதியரசர் சுமார் 322 வழக்கு விசாரணைகளை நிறைவு செய்ய வேண்டும்.

நாட்டில் 10 மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் உள்ளன. 20 நீதிபதிகள் சேவையில் உள்ளார்கள்.

2022ஆம்ஆண்டுதரப்படுத்தலுக்கு அமைய மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் 3,423 வழக்குகள் நிலுவையில் உள்ளன. ஆகவே மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஒரு நீதிபதி 171 வழக்கு விசாரணைகளை நிறைவு செய்ய வேண்டும்.

22 சிவில் குற்றவியல் நீதிமன்றங்களில் 6,800 வழக்குகளும், குற்றவியல் மேல் நீதிமன்றத்தில் 29,723 வழக்குகளும், மாவட்ட நீதிமன்றங்களில் 26,3481 வழக்குகளும், நீதிவான் நீதிமன்றங்களில் 8,03,642 வழக்குகளும், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான நீதிவான் நீதிமன்றத்தில் 1,108 வழக்குகளும், தொழில் நியாய சபைகளில் 5225 வழக்குகளும் நிலுவையில் உள்ளன. ஆகவே ஒட்டு மொத்தமாக 1,127,265 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

உயர்நீதிமன்றம் முதல் நீதிவான் நீதிமன்றங்கள் வரை 399 நீதிபதிகள் மாத்திரமே சேவையில் உள்ளார்கள். குற்றவியல் மேல் நீதிமன்றங்களில் 5,550 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளும், 4,312 பெண் துஷ்பிரயோக வழக்குகளும் நிலுவையில் உள்ளதையிட்டு இலங்கையர் என்ற ரீதியில் வெட்கப்பட வேண்டும்.

சட்டங்கள் கடுமையானால் குற்றங்கள் குறைவடையும் என்ற காரணத்தால் கடந்த ஏழு மாத காலத்துக்குள் மாத்திரம் 25 சட்டமூலங்கள் இயற்றிக் கொள்ளப்பட்டன.

3,298 மனித படு கொலை வழக்குகளும், 3,376 அபாயகர வழக்குகளும் நிலுவையில் உள்ளன. ஆகவே எதிர்வரும் காலங்களில் இந்த வழக்கு விசாரணைகளை நிறைவுக்கு கொண்டு வர உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. -என்றார். (05)

# திருட்டுக் கும்பலுடன் இணைந்துசெயற்பட வருமாறு அழைப்பது கேவலமான செயல்

## உதயகுமார் ஆவேசம்

நாட்டில் உள்ள பல லட்சம் தொழிலாளர்களின் ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ். பணத்தில் கை வைத்து விட்டு ஒன்றிணைந்து செயற்பட வருமாறு எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுக்கின்றமை மிகவும் வேடிக்கையான விடயம் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த செயற்பாடு, திருட்டு சம்பவம் இடம்பெற்ற பின்னர் அதனைக் கண்டுபிடிக்க வந்தவர்களையும் திருட்டுக் கும்பலில் சேர்ந்து பங்காளியாகுமாறு அழைப்பதற்கு சமன் என மயில்வாகனம் உதயகுமார் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

ஈ.பி.எவ். இன் நோக்கம், பணியாளரின் ஓய்வூதியக் கட்டத்தில் நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பணியாளரின் பங்கிற்கு வெகுமதி அளிப்பதும் ஆகும்.

ஆனால் அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் காரணமாக கடன் கழிப்பு செய்யப்பட்டு கடன் வழங்கிய நிறுவனங்கள் பாதிக்கப்படும்.

அப்படி பார்க்கையில் இங்கையின் மொத்த உள்நாட்டுக் கடன் 12 ஆயிரம் பில்லியன்களாகும். இது 74 சதவீதமாகும். இதில் 27 சதவீத கடன் ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து பெறப்பட்டுள்ளது.

எனவே, இந்தக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தில் நிச்சயமாக ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் வங்கிகளுக்கும் இழப்பு ஏற்படும். இந்த இழப்பை ஈடுசெய்ய வங்கிகள் கடன் வட்டி வீதங்களை அதிகரிக்க நேரிடும். நிலையான வைப்புகளுக்கு வழங்கும் வட்டி விகிதத்தைக் குறைக்க நேரிடும். இதனால் நாட்டு மக்கள் அதிகம் பாதிக்கப்படுவர்.

குறிப்பாக 25 லட்சம் ஊழியர் சேமலாப நிதி பங்குதாரர்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய வட்டி விகிதத்தை இழப்பர். அரசாங்கம் அவர்களுக்கு 9 சதவிகித வட்டி வழங்குவதாக உறுதி அளிக்கிறது. ஆனால் அதனை நம்ப முடியாது. அப்படியே வழங்கப்பட்டால் வட்டி விகிதம் குறைந்தது 12 சதவிகிதமாக இருக்க வேண்டும். அதற்குத் தேவையான சட்டத் திருத்தம் உடனடியாக நாடாளுமன்றில் செய்யப்பட வேண்டும்.

அரசாங்கம் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செய்வதற்கு நாட்டின் பண முதலைகளை விட்டுவிட்டு நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழ்பட்ட அப்பாவி தொழிலாளர்களின் இறுதி மூச்சாகக் கருதப்படும் ஊழியர் சேமலாப நிதியில் கை வைத்துள்ளது. சரியாயின் ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ். பணத்தில் கை வைப்பதற்கு முன்னர் அந்த நிதிக்கு உரிமையாளர்களான தொழிலாளர்களிடம் அரசாங்கம் அனுமதி கோரியிருக்க வேண்டும். ஒருவரின் வைப்பு பணத்தில் அவரை கேட்காது அவருக்கு தெரியாது கைவைப்பது 'திருட்டு செயல்' அன்றி வேறு என்ன?

எனவேதான் இந்த அரசாங்கம் தொழிலாளர்களின் ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ். பணத்தைத் திருடியுள்ளது என நாம் குற்றச்சாட்டு முன் வைக்கிறோம். ஈ.பி.எவ்., ஈ.பி.எவ். பணத்தை யானை விழுங்கியது என்ற குற்றச்சாட்டு போலத்தான் கடன் மறுசீரமைப்பில் ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ். பணம் திரு டப்பட்டுள்ள குற்றச்சாட்டும் காணப்படுகிறது.

எனவே அன்று எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் இன்று அதனைக் கை உயர்த்தி ஆதரித்துள்ளதன் மர்மம் என்ன? திருடப்படும் பணத்தில் பங்கு கிடைப்பதால் கை உயர்த்தி ஆதரவு வழங்கியுள்ளார்கள் என்றே கருத வேண்டும்.

ஆகவே, திருட்டுக் கும்பல்கள் ஒன்று சேர்ந்து ஒரு பாரிய திருட்டைச் செய்துவிட்டு அதற்கு ஆதரவு வழங்கிளங்களையும் திருட்டுக் கும்பலில் சேருமாறு அழைப்பது கேவலமான செயலாகும். இதற்கு ஒருபோதும் நாம் இணங்க மாட்டோம். அதற்குப் பதிலாகத் திருட்டுக் கும்பலின் சதித்திட்டங்களை மக்களுக்கு அம்பலப்படுத்தி அவர்களை விரட்டி அடிக்கவும் சட்டத்தின் முன் தண்டனை பெற்றுக் கொடுக்கவும் முழு மூச்சுடன் செயற்படுவோம்' என நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்துள்ளார். 05)

# நீதிமன்றக் கட்டமைப்புகளில் மாற்றம் அவசியம்; எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

## வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி கோருகிறார்



நல்லாட்சி அரசாங்கம் நீதிமன்றக் கட்டமைப்பில் ஏற்படுத்திய மாற்றங்களைத் தொடர்ந்து முன்னெடுத்து செல்கிறோம். நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வர புதிய பொறிமுறை செயற்படுத்தப்படும்.

சிறந்த மாற்றத்துக்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 'நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்' தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான முதலீடுகள் போதுமானவையாக இல்லை என்று குறிப்பிடுகின்றமையை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே, நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக விசேட நிதி ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சட்ட திருத்தத்துக்காக 80 யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற நடவடிக்கைகளில் நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த சிறந்த திட்டங்களை வினைத்திறனான முறையில் முன்னெடுத்துச் செல்கிறோம்.

நீதிமன்ற நடவடிக்கைகளை டிஜிற்றல் மயப்படுத்த வெளிநாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

நீதிமன்றக் கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு சிறந்த நிலைக்கு செல்ல வேண்டும். குறைப்பாடுகளை மாத்திரம் விமர்சித்துக் கொண்டிருந்தால் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. பல நெருக்கடியான சூழலில் நீதிபதிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு அமைய உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள், நீதிபதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றக் கட்டமைப்பின் முன்னேற்றத்தால் பொதுமக்கள் பயனடைகிறார்களா என்பது குறித்து ஆராய வேண்டும்.

நீதிமன்ற விசாரணைகளின் முறைமை மாற்றியமைக்க வேண்டும். வணிக மேல்நீதிமன்றங்களிலும் வழக்கு விசாரணைகள் அதிகரித்துள்ளன. ஆகவே, வணிக மேல்நீதிமன்றங்களின் விசாரணைகளை விரைவுப்படுத்த விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆகவே நாட்டுக்காக நீதிமன்றக் கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும். ஒரு வழக்கை விசாரணை செய்யும் நீதிபதி அந்த வழக்கை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். நடைமுறையில் ஏற்படுத்தா விட்டால் நீதிமன்றக் கட்டமைப்பில் ஒருபோதும் மாற்றம் ஏற்படுத்த முடியாது. ஆகவே, நீதிமன்றகட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும். - என்றார். (05)

# அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் வரையறை செய்யப்பட வேண்டும்

## கோருகிறார் சாகர காரியவசம்



கொள்கை ரீதியில் அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களை நீதிபதிகள் விமர்சிப்பது நாட்டுக்கு பொருத்தமற்றது. உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் வரையறை செய்யப்பட வேண்டும் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 'நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்' தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நீதிமன்றங்களில் தேக்கமடைந்துள்ள வழக்கு விசாரணைகள் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைவதற்கு ஒரு தடையாக உள்ளன.

வெளிநாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கு குறைந்தபட்சம் நான்கு ஆண்டு காலமேனும் செல்கிறது.

வழக்கு விசாரணைகள் தாமதப்படும் போது பாதிக்கப்படும் தரப்பினர் ஒட்டுமொத்த அரச கட்டமைப்பையும் கடுமையாக விமர்சிப்பார்கள். நடைமுறையில் அவ்வாறான தன்மையே காணப்படுகிறது. நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் வணிக நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என 1996 ஆம் ஆண்டு ஆட்சியில் அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானம் எடுத்து வணிக மேல் நீதிமன்றத்தை ஸ்தாபித்தது.

இந்த நீதிமன்றத்தை ஸ்தாபிப்பதற்கான நோக்கம் தற்போது நிறைவேறியுள்ளதா என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

நாட்டில் மொத்த சனத்தொகைக்கும், நீதிபதிகளின் எண்ணிக்கைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 11 ஆகக் காணப்பட்டது. அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துடன் அந்த எண்ணிக்கை 17 ஆக அதிகரிக்கப்பட்டது.

நீதிமன்ற நடவடிக்கையின் தாமத நிலை நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடையாக அமைந்து விடக் கூடாது. பௌதீக மற்றும் மனித வளத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்படும் குறைப்பாடுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

நீதிமன்ற நடவடிக்கைகளை நவீன மயப்படுத்தினால் பல விடயங்களைத் துரிதமாக செயற்படுத்திக் கொள்ளலாம்.

அரசாங்கம் கொள்கை ரீதியில் எடுக்கும் தீர்மானங்களை நீதிபதிகள் விமர்சிக்கின்றமை முறையற்றது. விடுதலைப் புலிகள் அமைப்பை அழிப்பதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியில் எடுத்த தீர்மானத்தை அப்போது எவரேனும் அடிப்படை உரிமை மீறல் என்று நீதிமன்றம் சென்றிருந்தால் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருக்க முடியாது.

அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் நடைமுறையில் செயற்படுத்தப்படுகின்றனவா என்பது கேள்விக்குள்ளாகியுள்ளது.

ஆகவே உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் அடிப்படை உரிமைமீறல் தொடர்பான மனுக்களின் விடயதானங்கள் வரையறை செய்யப்பட வேண்டும். - என்றார். (05)

# பல்கலைக்கழகமே கோரினோம் மதுபானசாலைகள் அல்லவாம்

## நுவரெலியா தொடர்பில் இராதாகிருஷ்ணன்

பொருளாதார சுமையால் பாதிக்கப்பட்டுள்ள பெருந்தோட்ட மக்களை மது போதைக்கு அடிமையாக்கும் செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுத்துள்ளமை முறையற்றதாகும்.

நுவரெலியா மாவட்டத்துக்கு பல்கலைக்கழகத்தைக் கோரினோமே தவிர, மதுபான சாலைகளைக் கோரவில்லை. ஆகவே, புதிய மதுபான சாலைகளை அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 'நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்' தொடர்பான சபை ஒத்திவைப்பு வேலை விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நீதிமன்றங்களில் வழக்குகள் தாமதமாவதற்கு பல்வேறு காரணங்கள் செலுத்துகின்றன. வழக்குகளை தாமதப்படுத்துவதால் குற்றவாளிகள் தப்பித்துக்கொள்கின்றார்கள். சாட்சிகள் மாறிப்போகின்றார்கள். சாட்சிப்பொருள்கள் அழிந்து போகின்றன. சில சமயங்களில் குற்றவாளிகள் இறந்து போகின்றார்கள்.

சாட்சிக்காரர்களும் இறந்துபோகின்றார்கள். வழக்குத்தாக்கல் செய்பவர்களும் இறந்து போகின்றார்கள். ஆகவே, வழக்குகள் தாமதிப்பதால் வழக்கு தாக்கல் செய்பவர்கள், சாட்சிக்காரர்களுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட இடமுண்டு. காலம் தாழ்த்தி வழக்குகள் விசாரிக்கப்படுவதால் பண விரயம் ஏற்படுகின்றது.

பெருந்தோட்ட பகுதிகளில் குறிப்பாக எமது மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. பொதுவாக மலையகப்பகுதி மக்கள் வாழ்க்கை சுமையால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு மதுப்பழக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியை இப்போது அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தை இரண்டு கலால் பிரிவுகளாக பிரித்தால் நுவரெலியா மாவட்டத்தில் 48 மதுபான சாலைகளும் அம்பகமுவ அதாவது ஹற்றன் பகுதியில் 64 மதுபானசாலைகளும் என மொத்தமாக 112 மதுபான சாலைகள் தற்போது உள்ளன.

பெருந்தோட்டப் பகுதியில் வாழும் மக்கள் தங்களுடைய வாழ்க்கைசெலவை கொண்டு செல்ல முடியாத நிலையில் தமது வருமானத்தின் ஒரு பகுதியை இந்த மதுபானசாலைகளுக்கு செலவளிக்கும் நிலை ஏற்பட்டள்ளது. அதற்கும் அப்பால் இப்போது அரசியல்வாதிகளின் அனுசரணையோடு கடந்த வாரம் டயகம பகுதியில் புதிய மதுபானசாலை ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதை எதிர்த்து அங்கு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுவாக டயகம பகுதியில் 4 கிராமசேவகர் பிரிவுகளில் 16 ஆயிரத்து 714 மக்கள் வாழ்கிறார்கள். இந்தப்பகுதியில் மக்கள் மருந்துஎடுப்பதற்கு ஒரு மருந்தகம்தான் உள்ளது. ஆனால் இங்கு 3 மதுபானசாலைகள் உள்ளன.

இப்போது 4 ஆவதாக ஒரு மதுபான சாலையைத் திறக்கும் அனுமதியையும் அரசு வழங்கியுள்ளது. இந்த மதுபானசாலைக்கான அனுமதியை வழங்க அந்தத் தோட்டத்திலுள்ள தோட்டக்காணியை அந்த தோட்ட முகாமையாளர் கொடுத்துள்ளார்.

தலவாக்கலை பிரதேச சபை தற்போது புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் மக்களுக்கு பெரும் நன்மைகள் ஏற்படப்போகின்றது என நாங்கள் நினைத்தால் இந்த தலவாக்கலை பிரதேச சபை முதன்முதலாக இந்த மதுபானசாலைக்கே அனுமதி வழங்கியுள்ளது. மக்களின் வாழ்விடங்கள், கோவில்கள், பாடசாலைகள் உள்ள இடத்தில் இவ்வாறான மதுபானசாலை வருகின்றமையால் கலாசாரம் அழிந்து விடும் நிலை ஏற்படும்.

இதேபோன்று அக்கரப்பத்தனை பகுதியில் 8 கிராமசேவகர் பிரிவுகள் உள்ளன. அங்கு 31ஆயிரத்து 725 பேர் வசிக்கின்றனர். இங்கு ஏற்கனவே 4 மதுபானசாலைகள் உள்ளன. இப்போது அங்கு மேலும் மதுபானசாலைகள் அமைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தில் புதிதாக சேர்ந்துள்ள கட்சிகளுக்கு ஒவ்வொருவருக்கும் இவ்விரண்டு மதுபான சாலைகள் அல்லது 10 மதுபான சாலைகளை நுவரெலியாவுக்கு கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நாம் அறிகின்றோம்.

நாம் நுவரெலியா மாவட்டத்துக்கு கேட்டது பல்கலைக்கழகம். ஆனால் கொடுக்கப்படுவதோ மதுபானசாலைகள். நாம் மதுபானசாலைகளை கேட்கவில்லை. இந்த மது பானசாலைகளை மூடுவதன் மூலம் தான் அங்கு ஒரு கலாசார விடிவு ஏற்படும். மதுபானசாலைகள் எமது மக்களுக்கு அவசியமில்லை. மதுபான சாலைகளை முற்றுமுழுதாக ஒழிக்க வேண்டும். ஆகவே, புதிதாக மதுபானசாலைகளை அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிட வேண்டும். - என்றார். (05)

# தரமற்ற, பதிவுசெய்யப்படாத மருந்துகள் நாட்டில் என்றும் பயன்படுத்துவதில்லை

## எதிர்க்கட்சித் தலைவருக்கு அமைச்சர் கெஹலிய பதில்

நாட்டுக்குள் பயன்படுத்தப்படும் மருந்து பாவனையின் போது சிலருக்கு பாதிப்பு ஏற்பட்டதன் காரணமாக கடந்த காலங்களில் சில சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அவ்வாறு இல்லாமல் பதிவு செய்யப்படாத தகாத மருந்துகளைப் பயன்படுத்துவதில்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நிலையியற் கட்டளை 27 இன் 2 கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.



சஜித் பிரேமதாஸ தெரிவிக்கையில் -

நாட்டில் விற்பனைக்காக இருக்கும் மருந்துப் பொருள்களின் உற்பத்திப் பாதுகாப்பு, தரம் மற்றும் செயல்திறனுக்கான தொடர்புடைய தரநிலைகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்து பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதும் மேம்படுத்துவதும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையின் பணியாகும்.

எவ்வாறாயினும், தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையின் நிர்வாகிகள் அந் நிறுவனத்தில் பணியாற்றிய அனுபவம் வாய்ந்தவர்களை விடுவித்து அவர்களின் விருப்பத்துக்கேற்ப செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுவதோடு, உகந்த மருந்துகள் ஒழுங்கு முறை செயல்முறை இல்லாத காரணத்தால், தரமற்ற மருந்துகள் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன எனவும் அண்மைய கால தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக இத்தகைய செயல்களின் விளைவாக, எதிர்மறையான மருந்தால் எதிர்வினைகள் ஏற்பட்டு சிலர் உயிரிழந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன. எனவே, மக்களின் சுகாதார விடயத்தில் அதிக கவனம் செலுத்தி, அதிகாரிகளின் இதுபோன்ற செயல்களைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார்.

அதற்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் -

கண்டி வைத்தியசாலையில் இடம்பெற்ற கண் சொட்டு மருந்து தொடர்பிலேயே எதிர்க்கட்சித்தலைவர் குற்றம் சாட்டியிருந்தார்.

ஆனால் அந்த மருந்து 7 வருடங்கள் பயன்படுத்தி இருக்கிறது. அது பதிவு செய்யப்பட்ட மருந்தாகும். அவ்வாறு இல்லாமல் பதிவு செய்யப்படாத தரம் குறைந்த மருந்து அல்ல. குறித்த மருந்து 7 வருடங்களாகப் பயன்படுத்தப்படுவதுடன் 53 நாடுகளுக்கு அனுப்பப்படுவதாகும்.

அதேபோன்று பேராதனையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கேள்வி எழுப்பிருந்தீர்கள். ஆரம்பத்தில் இரண்டு பிள்ளைகள் மரணித்தனர் எனத் தெரிவித்தார்கள். மிகவும் தவறாக இதனைப் பயன்டுத்துகிறார்கள்.

குறித்த மருந்து பிள்ளைகளுக்கு பயன்படுத்துவதில்லை. அதில் ஒன்றில் 5 பேருக்கு பயன்படுத்த வேண்டும். அந்த மருந்தில் 2 எடுத்துக்கொண்டு 10 பேருக்குப் பயன்படுத்தி இருக்கிறது. 9 பேருக்கு எந்த பிரச்சினையும் இருக்கவில்லை. ஒருவருக்கு பிரச்சினையாகி இருக்கிறது. மருத்துவ விஞ்ஞானத்தில் அவ்வாறான பிரச்சினை ஏற்பட இடமிருக்கிறது.

அதேபோன்று எங்களிடம் 14 உயிர்காக்கும் மருந்துகள் உள்ளன. அந்த 14 உயிர் காக்கும் மருந்துகளும் தற்போது எந்தக் குறையும் இல்லாமல் வைக்கப்பட்டுள்ளன.

இதை நான் கூறும்போது, மரணிப்பதை நியாயப்படுத்துவதாக வாதிடுவார்கள். அவ்வாறு இல்லை. இந்த நிலையில் சில சிக்கல்கள் ஏற்படும் போக்குகள் இருக்கின்றன என்பதை யார் வேண்டுமானாலும் அறிவார்கள்.

அத்துடன் இங்கு சில குறைபாடு இருக்கிறது என்பதையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். என்றாலும் வெளியார்களின் அழுத்தங்களால் எம்மை அச்சுறுத்தி அழித்து, அவ்வாறு இல்லாவிட்டால் இதன் மூலம் பொறாமை அரசியலை கட்டியெழுப்ப இடமளிக்கப்போவதில்லை. - என்றார்.

இதன்போது எழுந்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சந்தேகம் இன்றி உறுதியுடனே இந்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம் நான் முன்வைத்தேன். அனைத்து மருந்துகளும் தரமான மருந்துகள் என்று கூறப்படுகின்றன. ஏற்பட்ட சம்பவங்கள் மருந்தின் தாக்கத்தால் ஏற்பட்டவை என தற்போது கூறுகின்றனர்.

அதனால் குறித்த மருந்தின் தரம் தொடர்பான அறிக்கையை சபைக்கு சமர்ப்பிக்கிரேன். அதனால் மருந்தின் தாக்கத்தால் மரணம் ஏற்படவில்லை. தரம் குறைந்த மருந்து பயன்டுத்தப்பட்டிருக்கிறது.

அதேபோன்று இந்த மருந்து பொருத்தமற்றது என தெரிவிக்கப்பட்ட அறிக்கையையும் நான் சபைக்கு சமர்ப்பிக்கிறேன். அதனால் குறித்த மருந்து பல வருடங்கள் பயன்படுத்தப்பட்டது எனத் தெரிவிக்க வேண்டாம். முடியுமானால் இந்த அறிக்கைகள் பிழை என நிரூபித்துக்காட்டுங்கள். - என்றார். (05)

# அரசின் நிகழ்ச்சிநிரலில் செயற்படும் சபாநாயகர் தொடர்பில் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தில் முறையிட வேண்டும்

## எஸ்.எம்.மரிக்கார் காட்டம்

ரணில் விக்கிரமசிங்க யார் என்பதைச் சரியாகத் தெரிந்துகொள்ளாத மொட்டு கட்சியினரே அவரை ஆதரிக்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

அத்துடன் சபாநாயகரின் நடவடிக்கை தொடர்பில் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தில் முறையிட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 'நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்' தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -



மத்திய வங்கி பிணைமுறி கொள்ளையை மக்கள் முன் வெளிப்படுத்தியவர் தான் என்றே அமைச்சர் பந்துல குணவர்தன தேர்தலில் போட்டியிட்டார். ரணிலுக்கு பிரதமர் பதவி வழங்க நாங்கள் பைத்தியங்கள் அல்லர் என்று ரோஹித அபேகுணவர்தன கூறியதுமையுடன் ரணில் சிறைக்கு செல்லும் நாளில்தான் நான் உறங்குவேன் என்று கூறிய மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோரே கடன் மறுசீரமைப்பு சட்டத்தை ஆதரிக்கின்றனர்.

இவர்கள் எப்படி நாட்டைக் கட்டியெழுப்பப் போகின்றனர். ரணில் விக்ரமசிங்கவை பற்றி மொட்டு கட்சியினருக்கு எதுவும் தெரியாது. நாங்கள் நன்கு அவரைப் பற்றி அறிந்துள்ளோம். கடன் பெறவும் விற்கவுமே அவருக்குத் தெரியும். இந்நிலையில், கடன் மறுசீரமைப்பு சட்டம் எவ்வளவு சிக்கலானது என்று நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

அத்துடன், கடன் மறுசீரமைப்பு விவாதத்தின் இறுதியில் சபாநாயகர் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ற வகையில் தீர்மானித்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலருக்கு தங்களின் கருத்துக்களை தெரிவிக்க இடமளிக்காமல் சபை நடவடிக்கையை நிறைவுக்கு க் கொண்டுவந்தார்.

கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு மாற்றமாகவே சபாநாயகர் செயற்பட்டார். அதனால் சபாநாயகரின் இந்த நடவடிக்கை தொடர்பாக சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தில் முறையிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - என்றார். (05)

# ஹற்றன் செனன் கே.எம். பிரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி



மலையகத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஹற்றன் செனன் கே.எம். பிரிவில் 4 வீடுகள் சேமதமாகியுள்ளன.

இதனையடுத்து, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரின் பணிப்புரைக்கமைய இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் குழுவினர் அவர்களுக்கு உடனடியாக நிவாரண பொருள்களை வழங்கி வைத்தனர்.

பிரதி தலைவர் கணபதி கனகராஜ், அம்பகமுவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள் ராஜரத்தினம், யோகேஸ்வரி, அமைச்சரின் இணைப்புச் செயலாளர் அர்ஜூன் ஜெயராஜ், பிரத்தியேக உதவியாளர் தயாளன் ஆகியோர் இணைந்து பாதிக்கப்பட்ட இடத்துக்கு உடன் விஜயம் செய்து நிலைமையை பார்வையிட்டதோடு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கினர்.

மேலும், ஹற்றன் மனிதவள அபிவிருத்தி ஸ்தாபன உத்தியோகத்தர்களுக்கு தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடி துரித கதியில் குடியிருப்புகளை சீர்செய்து எதிர்காலத்தில் நீர் குடியிருப்புகளுக்கு உட்செல்லாதவாறு தடுப்புகளையும், வடிகாலமைப்பு வசதிகளையும் செய்து கொடுக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் தெரிவித்துள்ளனர். (05)

# அரசியல் நாடகத்தை அரசு கைவிடவேண்டும்

## இரா.துரைரெட்னம் வலியுறுத்து

'உள்ளூராட்சிமன்றங்கள் தொடர்பில் முன்னெடுத்துவரும் அரசியல் நாடகத்தை அரசாங்கம் உடனடியாகக் கைவிடவேண்டும்' என முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்னம் தெரிவித்துள்ளார்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

உள்ளூராட்சிமன்றங்களுக்கு மக்கள் நான்கு வருடம் ஆணை வழங்கியுள்ளார்கள். எனினும் விரும்பிய பிரதிநிதிகளை மக்கள் தெரிவுசெய்வதற்கான உரிமையை இலங்கை அரசாங்கம் மீறியுள்ளது. இதுவொரு அடிப்படை மனிதஉரிமைமீறலாகும். இறைமையுள்ள அரசாங்கம் மக்கள் ஆணையை மதிக்க வேண்டும்.

நான்கு வருடம் உள்ளூராட்சி மன்றங்களுக்குவழங்கிய மக்கள் ஆணையை இலங்கை அரசாங்கம் மீற முற்படும் நிலையென்பது கண்டிக்கத்தக்க செயற்பாடாகும்.

மக்கள் ஆணையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதே அந்தஆணைக்குகொடுக்கும் மதிப்பாகும். இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள சதிவலையில் சிக்கிவிடாமல் தேர்தல்களை நடத்துவதற்கான அழுத்தங்களை மக்கள் விடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன். - என்றார். அத்துடன் விவசாயிகளின் விவசாயத்துக்கான செலவு அதிகரித்துள்ள நிலையில் நெல்லிற்கான விலையை அரசாங்கம் அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் மிகவும் கஷ்டமான நிலையில் உள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் விவசாயிகளைத் தொடர்ந்து ஏமாற்றும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது. தற்போது அறுவடைகாலம் தொடங்கியுள்ளதன் காரணமாக உடனடியாக நெல் கொள்வனவை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும்.

அத்துடன் நெல்லின் விலையானது அதிகரிக்கப்படவேண்டும். இதேபோன்று கிரிமிநாசினிகளுக்கான விலைகளும் குறைக்கப்பட வேண்டும். இன்றுள்ள சூழ்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுபோகத்தில் ஓர் ஏக்கர் விவசாயம் செய்வதற்கு ஒன்றரை லட்சம் ரூபா செலவு ஏற்படுகின்றது. விவசாயிகளின் செலவு அதிகரித்துள்ளதன் காரணமாக அரசாங்கம் இதனைக் கவனத்தில் கொண்டு நெல்லிற்கான விலை அதிகரிப்பு தொடர்பில் விவசாயிகள் விடுத்துவரும் கோரிக்கையை அரசாங்கம் நிறை வேற்ற வேண்டும். - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (05)




# அஸ்வெசும பயனாளிகள் தெரிவு தொடர்பான பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும்

## அம்பாறை மாவட்ட உண்மைக்கும் நீதிக்குமான வலையமைப்பு வலியுறுத்து

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ள அஸ்வெசும சமூக நலன்புரி உதவித் திட்ட பயனாளிகள் தெரிவில் காணப்படும் குறைபாடுகள் முறையாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என சிவில் அமைப்புகளை ஒன்றிணைத்த அம்பாறை மாவட்ட உண்மைக்கும் நீதிக்குமான வலையமைப்பு வலியுறுத்தியுள்ளது.

காரைதீவு பலநோக்கு கூட்டுறவு சங்க கட்டிடத்தில் இணைப்பாளர் எம். ஐ. றியால் தலைமையில் நடைபெற்ற சிவில் அமைப்புகளை ஒன்றிணைத்த அம்பாறை மாவட்ட உண்மைக்கும் நீதிக்குமான வலையமைப்பின் சந்திப்பில் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நலன்புரி உதவி திட்டம் பாகுபாடில்லாது பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் 20 இற்கும் மேற்பட்ட சிவில் அமைப்புகள் இணைந்து விடுத்துள்ள ஊடக அறிக்கையிலே இதனைத் தெரிவித்துள்ளது. (05)


# பெண்களே அதிகமாக பாலியல் இலஞ்சம் கொடுக்கும் நிலைமை

## கீதா குமாரசிங்க சுட்டிக்காட்டு

பெண்களே அதிகமாக பாலியல் இலஞ்சம் கொடுக்க வேண்டிய சூழல் நாட்டில் அதிகமாக காணப்படுவதாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -



'பெண் ஒருவர் ஒரு தடவை ஒரு துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டு விட்டால், அதன் பின்னர் அந்தப் பெண் பல தடவைகள் பல்வேறு வழிகளில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகிறார்.

ஊடகங்களால் அவரின் ஒட்டுமொத்த வாழ்க்கையும் இல்லாது போய்விடுகிறது. இதனால், தனது பிரதேசத்திலும் தனது நாட்டிலும் வாழ முடியாத நிலைமை ஏற்படுகிறது.

பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. இதனால், சில பெண்கள் தங்களுக்கு எதிரான அநீதிகளை வெளியே சொல்லாமல்கூட இருந்து வருகிறார்கள்.

இந்த நிலையில், இந்த சட்டமூலத்தின் ஊடாக இவ்வாறான குற்றங்களுக்கு எதிராக தண்டனை கிடைக்கும் என்பது சிறந்த ஒன்றாகும் என்றாலும், சாட்சியாளர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அரசாங்கத்துக்கு உள்ளது.

எவ்வாறாயினும், விரைவில் இந்த சட்டமூலத்தை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும்' என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir





# உதயநிதி ஸ்டாலினைச் சந்தித்தார் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்!

தமிழ்நாட்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்தித்து, இலங்கை நாட்டின் பொருளாதாரம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை தமிழ்நாட்டுக்கு மிக நெருக்கமான அயல் நாடாக இருப்பதால், இருதரப்பு உறவு பல நூற்றாண்டுகளாக தொடர்வதாகவும், தமிழ் நாட்டின் ஆதரவு இலங்கை மக்களால் எப்போதும் அங்கீகரிக்கப்பட்டுபாராட்டப்படுவதாகவும் செந்தில் தொண்டமான் உதயநிதி ஸ்டாலினிடம் தெரிவித்தார். (05)

# சௌபாக்கியா வீடமைப்பு திட்டத்தின்கீழ் வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு!





சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான சௌபாக்கியா வீடமைப்பு திட்டத்தின் கீழ் பிரதேச செயலக சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்குட்பட்ட 06 வீடுகளுக்கான (7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 03 வீடு, 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 03 வீடு) அடிக்கல் நடும் ஆரம்ப நிகழ்வு புதன்கிழமை நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபரின் நெறிப்படுத்தலிலும், சமுர்த்திதலைமைப்பீடசிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம் தலைமையிலும் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக்கும், அதிதிகளாக சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ மஜீத் , சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.ஹிதாயா, கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம். பவாஸ், பிரிவுக்கென கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் , பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட சமுர்த்தி அமைப்புக்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (05)

# எனது மகன் நாடு கடத்தப்படுவதை தடுத்து நிறுத்துங்கள் எனது குடும்பத்தில் அவர் மட்டுமே உயிருடன் இருக்கின்றார்!

## தமிழ் பெண் ஆஸ்திரேலிய பிரதமருக்கு உருக்கமான வேண்டுகோள்

தனதுமகன்நாடுகடத்தப்படுவதைஆஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பெனிஸ் தலையிட்டு நிறுத்தவேண்டும் என ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கை தமிழ்பெண்ணொருவர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

ரீட்டா அருள்ரூபன் என்ற இலங்கை பெண்ணே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

ரீட்டா அருள்ரூபன் 2012 இல் படகு மூலம் ஆஸ்திரேலியா சென்றுள்ளார் பல வருடங்களாக பாதுகாப்பு விசாவில் வாழ்ந்த அவருக்கு அரசாங்கம் நிரந்தர விசாவை வழங்கியுள்ளது.

அவர் தனது மகனை ஆஸ்திரேலியாவிற்கு உரியநடைமுறைகளைபின்பற்றி அழைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். எனினும், 2016 இல் அவரது விண்ணப்பத்தை ஆஸ்திரேலிய குடிவரவு திணைக்களம் நிராகரித்தது.

எனினும் அவரது மகன் டிக்ஸ்டன் 2019 இல் விமானம் மூலம் ஆஸ்திரேலியா சென்றதுடன் அங்கு அடைக்கலம் கோரினார்.

எனினும் அவரை ஆஸ்திரேலிய தொடர்ந்தும் குடியேற்றவாசிகளுக்கான முகாமில் தடுத்துவைத்துள்ளது.

இதேவேளை டிக்ஸ்டனை இலங்கைக்கு நாடுகடத்தவுள்ளதாக ஆஸ்திரேலியாவின் குடிவரவு திணைக்களம் அறிவித்துள்ளது.

தமிழர் என்பதால் தனது மகன் இலங்கையில் சித்திரவதை செய்யப்படலாம் அல்லது கொல்லப்படலாம் என அவரது தாயார் அச்சம் வெளியிட்டுள்ளார்.

பிரதமர் அவர்களே தயவு செய்து எனது மகனை என்னுடன் சேர்த்துவையுங்கள் எனது குடும்பத்தில் அவர் ஒருவர் மாத்திரமே எஞ்சியிருக்கின்றார் என ரீட்டா அருள்ரூபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரதமரை அவரது தாயார் மாத்திரமே வளர்த்தார். அவர் தாய்க்கும் மகனுக்கும் இடையிலான உறவின் மகத்துவத்தை புரிந்துகொள்வார் என நினைக்கின்றோம் எனவும் ரீட்டா தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அரசாங்கத்தை சேர்ந்த எவரும் தனது குரலை செவிமடுக்கின்றார்கள் இல்லை எனவும் ரீட்டா அருள்ரூபன் தெரிவித்துள்ளார்.

எனக்கும் ஏனைய அகதிகளுக்கும் தயவு செய்து உதவுங்கள் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனைத்துஅகதிகளுக்கும் நிரந்தரவதிவிடத்தை வழங்கவேண்டும் என்பதே எனது வேண்டுகோள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அருள்ரூபனின் கணவர் 2009 ஆம் ஆண்டு படுகொலையில் கொல்லப்பட்டார் ஆயிரக்கணக்கான மக்கள் இலங்கை இராணுவத்துக்கும் தமிழ் புலிகளுக்கும் இடையிலான உள்நாட்டு மோதலில் சிக்குண்டனர்.

55 வயதான அருள்ரூபன் 2012 இல் இராணுமுகாமில் வைத்து பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டார். அவரின் 26 வயது மகனின் ஆஸ்திரேலிய பாதுகாப்பு விசாவிற்கான விண்ணம் நிராக ரிக்கப்பட்டுள்ளது அவருக்கான வாய்ப்புகள் அனைத்தும் முடிவிற்கு வந்துள்ளது.

ஆஸ்திரேலிய பிரதமருக்கான அவரது வேண்டுகோளே அவரது இறுதி நம்பிக்கை.

நான் பெருமளவு மன உளைச்சலை எதிர்கொண்டேன். நான்பாலியல்வன்முறையைஎதிர்கொண்டேன். அதிலிருந்து தப்பி நான் ஆஸ்திரேலியா வந்தேன் என ரீட்டா தெரிவித்துள்ளார்.

நான் எனது மகனுடன் இணையலாம் என நினைத்தேன் அவர்கள் எனது மகனை என்னிடமிருந்து கொண்டுசெல்ல முயல்கின்றார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# நுவரெலியா தீ விபத்தால்

## பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை பூர்த்திசெய்வதற்கு அரசு நடவடிக்கை

நுவரெலியா - இராகலையில் நெடுங்குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தால், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான அனைத்து அத்தியாவசித் தேவைகளையும் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் உத்தரவுக்கு அமையவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரனின் ஆலோசனைக்கமைய, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் ஊடாக குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)







# இறால் பண்ணைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வட்டுவானில் அமைக்கப்பட்டுள்ள இறால் வளர்ப்பு பண்ணையினை தடுத்து நிறுத்துமாறு கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தெரிவித்து இறால் பண்னைக்கு முன்னால் நேற்று (வியாழக்கிழமை) நன்னீர் மீன்பிடியாளர்கள் மற்றும் பொதுமக் கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாங்கேணி, காயன்கேணி, வட்டவான, ஆலங்குளம். இறாலோடை ஆகிய மீனவ அமைப்புக்கள் இணைந்து குறித்த இறால் பண்ணைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்தனர்.

இதனையடுத்து நேற்று காலை 10 மணியளவில் காயன்கேணி பழைய பாலத்துக்கு அருகில் 50 இற்கு மேற்பட்ட மீனவர்கள் பொதுமக்கள் ஒன்றிணைந்து, அசுத்தப்படுத்தாதே வாவி நீரை அசுத்தப்படுத்தாதே, அழிக்காதே அழிக்காதே மீன் வளத்தை அழிக்காதே, 'சுத்தமான காற்றை சுவாசிக்க விடு' 'மீனவரின் வாழ்வாதாரத்தை அழிக்காதே, போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகள் ஏந்தியவாறும் கோ-ங்கள் எழுப்பி ஊர்வலமாக இறால் பண்ணைக்கு முன்னால் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் இதனை கவனத்தில் எடுத்து இப்பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் ஆர்ப்பாட்டகாரர்கள் கருத்து தெரிவித்ததுடன் சுமார் ஒரு மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர். (05)

# எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ ஜனாதிபதி ரணிலைச் சந்தித்தார்!

புதிய விமானப்படைத்தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ புதன்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தார்.

இலங்கையின் 19 ஆவது விமானப் படைத்தளபதியாக எயார்மார்ஷல் உதேனி ராஜபக்ஷ அண்மையில் நியமிக்கப்பட்டார்.

பதவியேற்ற பின்னர், புதிய விமானப்படைத் தளபதி சம்பிரதாய பூர்வமாக ஜனாதிபதியை சந்தித்ததுடன் நினைவுப் பரிசையும் கையளித்தார்.

புதிய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார். (05)



# யாழ்.பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களுக்கு மிரட்டலாம்!

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவுக்கானவிசேடபேரவை அமர்வுஎதிர்வரும்12ஆம்திகதி புதன்கிழமைஇடம்பெறவுள்ள நிலையில், பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களுக்கு அநாமதேயத் தொலைபேசி அழைப்புகள் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரவையின்உறுப்பினர்கள் சிலருக்குத் தெரியாத கைத்தொலைபேசி இலக்கங்களில் இருந்து அழைப்பு மேற்கொள்ளப்பட்டு, நாங்கள் அரசபுலனாய்வுச்சேவையில் இருந்து அழைக்கிறோம். யார் துணைவேந்தராக வர வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? ஏன் அவரை விரும்புகிறீர்கள்? நாங்கள் தான் இரகசிய அறிக்கை கொடுக்கவேண்டும். அதற்காகத்தான் கேட்கின்றோம் என்று கேட்கப்பட்டதாகப் பேரவை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தெரிவுக்கான காலம் நெருங்கி வரும் நேரத்தில் இவ்வாறு அழைக்கப்படுவது நல்லதல்ல என்றும் இதனால் பேரவை உறுப்பினர்கள் சிலர் விசனமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.07.2023இல் வெளியிடப்பெற்றது.